
கடற்கரை
புனித அந்தோணியார்
திருத்தலம்
பாலவாக்கம்

# கிழக்கு கடற்கரை ராகம்

விலை ரூ. 20/-

ஆகஸ்ட் 2024 மாத இதழ்


ஆண்டு சந்தா ரூ. 250/-











கடற்கரை
புனித அந்தோணியார்
திருத்தலம்
பாலவாக்கம்

# கிழக்கு கடற்கரை ராகம்


**ஆசிரியர் மற்றும் வெளியிடுபவர்**
அருட்பணி. **காணிக்கைராஜ் G**

**ஆசிரியர் குழு**
அருட்பணி. **அசோக்**
அருட்பணி. **ஜேசு**
திரு. **ரோனா ஆல்பர்ட்**

**வடிவமைப்பு**
**GB.பிரிண்டர்ஸ்**

**அச்சில் உதவி**
**L.சுபாஷினி**



**திருத்தல முகவரி**

பாலவாக்கம் கடற்கரை
புனித அந்தோணியார் திருத்தலம்
38, எம்.ஜி.ஆர்.சாலை
பாலவாக்கம், சென்னை – 41
தொ.பேசி: (044) 2449 3684, 2449 3442
**மின்னஞ்சல்:** seashorestantony@yhoo.co.in
**இணையம்:** www.seashorestanthony.org


## உள்ளே...

*ராகம் – 101*

## ஆகஸ்ட் – 2024


ஆசிரியர் பக்கம் ....... 02

“ வார்த்தை மனிதரானார்
நம்மிடையே குடி கொண்டார் ”
அருட்பணி. **அசோக்குமார் J.P.** ....... 03

பதவி வெறியா? பாசத்து நெறியா?
**அ. மரிய அருள் ராஜா சே.ச.** ....... 04

சுதந்திர தின வாழ்த்துகள் !
அருட்பணி. **ஜேசு** ....... 07

இளமையின் பேராற்றல் ....... 08

சொல்லில் விவேகம் வேண்டும் ....... 10

நம்முடன் தூய ஆவியார்
**ரோனா ஆல்பர்ட்** ....... 12

அழியா நாவின் அற்புத
பரிந்துரைகளின் சாட்சி ....... 16

வெதுவெதுப்புநிலை மற்றும்
காம இச்சைக்கெதிராக
அருட்பணி. **இயேசு அந்தோணி** ..... 17

அன்னை மரியின் விண்ணேற்பு
பெருவிழா ..... 20

வினா விடை போட்டி
வினாத்தாள் 1 ..... 21

ஞாயிறு சிந்தனைகள்
அருட்பணி **காணிக்கைராஜ்** ....... 22

## ஆசிரியர் பக்கம்

# அருட்பணி காணிக்கைராஜ்

### திருத்தல அதிபர்



## அன்புமிக்க கடற்கரை ராகம் வாசக நண்பர்களே.

கடற்கரை ராகம் மாத இதழின் வாசக நண்பர்களுக்கு அன்பான வணக்கத்தையும் ஜெபங்களையும் உரித்தாக்கிக் கொள்கிறேன். நமது மாத இதழுக்கு நீங்கள் தருகின்ற ஆதரவுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றிகள். தொடர்ந்து நமது மாத இதழை உங்கள் நண்பர்களுக்கு அறிமுகம் செய்துவைக்க அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**பிரியமானவர்களே,**

### ஆகஸ்ட் -15 இந்தியாவின் சுதந்திர தினம்:

இந்தநாள் கொடியேற்றுவதுடனும் தொலைக்காட்சிகளில் வருகிற சிறப்பு நிகழ்வுகளை பார்த்து மகிழ்வடைவதுடனும் முடிந்து போகிற நாள் அல்ல. இந்தநாள் நமது பொறுப்புணர்வை கடமை உணர்வை உரசிப் பார்க்க வேண்டிய நாள். இரத்தம் சிந்தி உயிரை கொடுத்து வாங்கிய சுதந்திரம் இன்று யாரிடம் இருக்கிறது? இந்தியாவில் என்ன நடக்கிறது? என்பதை சிந்திக்கும் நாள். ஆட்சியில், பதவியில் இருப்பவர்கள் எதிரிகளாக இருந்தாலும் கூட்டாளிகளாகவே இருக்கிறார்கள் என்பதை கவனிக்க வேண்டிய நாள். ஏழைகளைப் பற்றி வறியவர்களைப்பற்றி அக்கறை கொள்ளாத நிலையே தொடர்ந்து இருக்கிறதே ஏன்? என்று கேள்வி கேட்க வேண்டிய நாள். நாட்டுப் பற்று இல்லாமல் வாழ்கிற நம்மை நாமே அலசிப்பார்க்கும் நாள்.

### ஆகஸ்ட் -15 மரியாவின் விண்ணேற்பு நாள்:

1950ஆம் ஆண்டு 12ஆம் பத்திநாதரால் கிறிஸ்தவ விசுவாச உண்மையாக அதிகார பூர்வமாக கத்தோலிக்க திரு அவையில் கொண்டாடப்பட வேண்டுமென்று அறிவிக்கப்பட்ட பெருவிழா தான் மரியாவின் விண்ணேற்பு. மரியாவின் வாழ்வும் பணியும் அர்ப்பண உணர்வும் நமக்கு எடுத்துக்காட்டாய் அமைந்துள்ளன. போராட்டங்களை கடந்து இலக்கினை அடைவதில் உறுதியாய் இருந்தவர் அன்னைமரியா. சவால்களைக் கண்டு சரிந்து போகாமல் இலட்சியங்களை நோக்கிப் பயணித்தவர் அன்னைமரியா . போராடும் குணம் இருந்தால் விண்ணகத்தையும் தொடமுடியும் என்பதே இந்த விழா நமக்கு தருகிற பாடம். சங்கடங்களை கடந்து சரித்திரங்களை படைக்க முயல்வோம்.

### ஆகஸ்ட் -15 அந்தோணியாரின் பிறந்த நாள்:

போர்ச்சுக்கல் நாட்டின் தலைநகர் லிஸ்பன் நகரில் 1195–ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15–ஆம் தேதி பிறந்தவர் அந்தோணியார். இன்று கோடி அற்புதர் என்றுபெயர் பெற்று விளங்கும் புனித அந்தோணியார் ஏழைகளின் பாதுகாவலர் என்ற பெயருக்கும் சொந்தக்காரர் என்பதை நாம் மறந்து விடக்கூடாது. ஏழைகளின் மீது பாசமும் கருணையும் கொண்டவர் புனித அந்தோணியார். அற்புதங்களை தேடி, அந்தோணியாரை நாடி வருகிற நாம் நம்மைத் தேடிவருகிற ஏழைகளை புறந்தள்ளி விடாமல் அவர்களுக்கு நேசக்கரம் நீட்டுவதே அந்தோணியாருக்கு நாம் தரும் பிறந்த நாள் பரிசாக இருக்க முடியும்.

அன்புடன்
**G.காணிக்கைராஜ்**
திருத்தல அதிபர்



# “ வார்த்தை மனிதரானார் நம்மிடையே குடி கொண்டார் ”

அருட்பணி. அசோக்குமார் J.P.
திருத்தல உதவித் தந்தை

“தொடக்கத்தில் வாக்கு இருந்தது; அவ்வாக்கு கடவுளோடு இருந்தது; அவ்வாக்கு கடவுளாயும் இருந்தது''. (யோவான் 1:1).

வார்த்தையான இறைவன் தொடக்க முதலே இருந்ததாகவும், அவரின் அந்த வார்த்தை தனக்குரியவர்களை எப்படி தேடி வந்திருக்கின்றது என்பதனையும் தெளிவுபடுத்துகிறது இந்த இறைவசனம்.

இறைவன் இந்த உலகத்தை உருவாக்கும் போது தன்னையும் இவ்வுலகிற்கு வெளிப்படுத்தி விட்டார். ஆனாலும் அத்தோடு நிறுத்திவிடாமல் தன் மகனையும் இவ்வுலகிற்கு மீண்டும் ஒரு முறை அனுப்பி தன் இருப்பை உறுதிப்படுத்துகிறார். இதற்கான ஒரு சூழ்நிலையில் தான் அன்னை மரியா இறைவனின் மீட்புத் திட்டத்தில் இடம் பெறுகிறார்.

இறை மகன் இயேசு மனிதராகப் பிறப்பெடுக்கும் காலம் வந்த போது, கன்னியான மரியாவிடம் இறைவன் கபிரியேல் தூதரை அனுப்பினார். அப்போது மரியாவுக்கு வயது 14 ஆண்டுகளும் 6 மாதங்களும் 17 நாட்களும் ஆகியிருந்தது. இந்தச் சூழ்நிலையில்தான் மரியா தான் கண்ட காட்சியை தியானித்துக்கொண்டு இருந்தார்.

அதிதூதர் கபிரியேல் பிற தூதர்களுடன் மரியாவின் இல்லம் சென்று அவரை வணங்கியதையும், பின் மரியாவிடம் அருள் நிறைந்தவளே வாழ்க! ஆண்டவர் உம்முடனே என்றதையும், மரியா கலக்க முற்றதையும், பின்பு தூதர் மரியாவிடம் கூறிய வார்த்தைகள் எல்லாமே இறைவனின் மீட்புத் திட்டத்தை உறுதிப்படுத்துகிறது.

இறைவன் இவ்வுலகத்தின் மீது வைத்திருந்த அன்பை அவரது மகன் மீது, நம் ஆண்டவர் இயேசுவின் வழியாகவும் அன்னை மரியாவின் உண்மையான அர்ப்பணிப்பின் வழியாகவும் உணர்ந்து கொள்ள முடிகிறது. இறைவன் தோன்றியதும் நமக்காய், வாழ்ந்ததும் நமக்காய். மனிதனையும் மற்ற உயிரினங்களையும் படைத்தவருமாகிய இறைவன் அவற்றை ஒரு போதும் தனிமையாய் விட்டுவிடுவது இல்லை. அவரின் தொடர் பராமரிப்பு என்பது தொடக்கத்தில் இருந்து, மோசே, நீதித்தலைவர்கள், இறைவாக்கினர்கள், அப்போஸ்தலர்கள், மற்றும் திரு அவைத் தலைவர்கள் வழியாக இன்றும் தொடர்ந்து நமக்கு வந்த வண்ணமாய் உள்ளது என்றால் அதுவே உண்மையும் கூட.

வெறும் வார்த்தைகளால் இவ்வுலகை உருவாக்கிய இறைவன் அவருடைய வார்த்தைகளை எவ்வாறு நாம் கடைப்பிடிக்க வேண்டும், தொடர்ந்து எவ்வாறு கையாள வேண்டும் என்பதையும் நமக்கு கற்றுத் தந்துள்ளார். இறைவனின் வார்த்தை வலிமையாய் உள்ளது.

இன்று நாம் நமது வாழ்வில் கேட்க வேண்டிய கேள்வி இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த வார்த்தைகளை நாம் எவ்வாறு பயன்படுத்துகிறோம்? நமது வார்த்தைகள் நமக்கும் பிறருக்கும் பயன் அளிக்கிறதா?

வார்த்தை மனுவுருவான இறைவன் நமது வார்த்தைகளிலும் வாழ்கிறார் பிறர் நம் வார்த்தைகளால் வாழும் போது!.....



# பதவி வெறியா? பாசத்து நெறியா?

அ. மரிய அருள் ராஜா சே.ச.

## அச்சமா? தயக்கமா?

கை சூப்பும் பருவத்திலும் கால் முளைத்த பருவத்திலும் ஓடிப்பிடித்து விளையாடி இருக்கின்றோம். கிட்டிப்புல், பம்பரம், சில்லாக்கு, கிளித்தட்டு விளையாடும் பருவங்களில் ஓடி ஒளிந்து விளையாடி இருக்கிறோம். வயதும் அந்தஸ்தும் ஏற ஏற முகமூடி போட்டு ஒளிந்து விளையாடும் உள்மனசுக்குள் விளையாடும் விளையாட்டுக்களை அதிகமாகவே விளையாடுகின்றோம். இயேசு பம்பரமாகச் சுழன்று ஊன் உறக்கமின்றி கலிலேயா தொடங்கி எருசலேம் வரையிலும் ஆற்றிய மக்கள் பணியின் வீச்சு விரிய விரிய அவரும் ஒளிந்து கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. எந்த நிலையிலும் இயேசு உள் மனசில் உருவான முகமூடி போட்டுக் கொண்டு விளையாட விரும்பவில்லை. பகிரங்க வாழ்வுத் தளத்தில் தீவினை புரிந்தவர் வெட்கத்தினால் ஊரைவிட்டு ஓடிப்போய் ஒளிந்து கொள்ளுவதைப் போல் இயேசு ஒளிந்து கொள்ள வில்லை. அல்லது வில்லத்தனமான பஞ்சாயத்துக்காரர்கள் விபரீதமான செய்திகளின் அடிப்படையில் வெறித்தனமாக இடும் அநீதத் தீர்ப்பினால் பாதிக்கப்பட்டோர் ஒளிந்து கொள்ள வேண்டிய நிலை ஏற்படுமே; இந்த நிலைக்கும் கூட இயேசு தள்ளப்பட்டு ஒளிந்து கொள்ள விரும்பவில்லை. ஆனால் இயேசு ஒளிந்து மறைந்து வாழ்ந்த காலக்கட்டம் உண்டு. எப்போது? வயிறு நிரம்பிய பூரிப்பில் மக்கள் கூட்டம் மந்தை மனப்பான்மையுடன் கண் மூடித்தனமாக ஆதிக்க பண்பாட்டை உள்வாங்கி அவரை அரசராக்க முயலும் போது இயேசு ஒளிந்து கொண்டார்.

தீவிரவாதிகள் தம் மத வெறியினால் உரோமையக் கொடுங்கோன்மையை வீழ்த்தி விட்டுத் தமது சொந்தக் கொடுங்கோன்மையை நிறுவிட முனைந்தனர். அப்போது இயேசுவை மையங் கொண்டிருந்த மக்கள் கூட்டம் அத் தீவிரவாதிகளை ஈர்த்தது. தமது தீவிரவாத வியூகங்களுக்கு இயேசுவைச் சூழ்ந்துள்ள கூட்டத்தையும் உள்ளடக்கித் தம் போராட்டப் பாணிகளை வடிவமைத்துக் கொள்ள முயன்றனர். இதற்கான ஒப்பந்தங்களை இரவோடு இரவாக வந்து இயேசுவிடம் பேசிமுடிக்கக் கூடி முயன்று இருக்கலாம்.

இயேசு தன்னைச் சூழ்ந்துள்ள ஆயனில்லா ஆடுகளை அந்தத் தீவிரவாதிகளின் கையில் பிடித்து கசாப்புப் போடவோ காவு கொடுக்கவோ விரும்பவில்லை. எனவே அத்தகைய ஒளிந்து திரியும் அத்தீவிரவாதிகளின் கண்களுக்குப் படாமல் ஒளிந்து விடக் கூடிய தேவையும் ஏற்பட்டது இயேசுவுக்கு.

எளியமக்களின் தன்னுணர்வுகளை விழிப்படையச் செய்து அவர்தம் வாழ்வுக்கும் மனித உரிமைக்கும் பிறரையோ அரசையோ சார்ந்திராமல் தம் சொந்தக் காலிலேயே அவர்களை நிற்கச் செய்யும் குறுக்கீடு செய்துபாருங்கள். இன்றைய மக்கள் விரோத அரசுகள் வேட்டை நாய்களாக மாறி சந்து பொந்திலெல்லாம் புகுந்து உங்களைக் கடித்துக் குதறும்.

அதனால் தான் அன்றைய எருசலேம் மையத்து யூதச் சமயத்தை ஆள்வோரும் உரோமையக் காலனி அரசினை ஆள்வோரும் வேட்டை நாயாக இயேசுவைத் தேடி அலைந்தார்கள்.

இயேசுவும் ஒளிந்து கொண்டார். தன் நெஞ்சுக்கு நெருக்கமான பெத்தானியா ஊரின் மரியா மார்த்தாவின் தம்பியும் தன் நண்பனுமான இலாசர் செத்து விட்டதாகச் சேதி வந்தபோது அவர் ஒளிந்து கொண்டுதான் இருந்தார். நண்பரை அழைத்து ஆலோசனை செய்தபோது வெளியே தலைக்காட்டும் ரிஸ்க் எடுப்போமே என முடிவு கட்டித்தான் எருசலேமிலிருந்து 7, 8 மைல் தொலைவிலுள்ள பெத்தானியாவுக்கு வந்து சேர்ந்தார்.

இயேசு ஒளிந்து கொண்டார்... உயிருக்கு பயந்துக்கொண்டு அல்ல. எந்த நேரத்தில் எப்படி உயிரை வழங்கினால் பலரும் நிரம்பப் பயன்பெறுவர் என்னும் நோக்கில் தான் ஒளிந்துக் கொண்டார். சாவதைக் கூடப் பொருத்தமாகச் சாகவேண்டுமே! என்னும் ஆதங்கம் இயேசுவின் தேர்ந்து தெளியும் முறையை இன்னும் தெளிவாக்கியது.

'யாவே'கடவுளின் இறையாண்மையை (Sovereignty) காப்பதாகக் கூறி உயிர் நீத்தவர்கள் யூதத் தீவிரவாதிகள். தோரா என்னும் கூட்டத்தைத் தூக்கிப் பிடிக்கிறேன் எனக் கூறி உயிர் துறந்தவர் மக்கபேயர் போராளிகள்.

சாதியக் கௌரவத்திற்காகவோ மொழியைக் காப்பதற்காகவோ தலைவனையோ தலைவியையோ கோர்ட்டில் ஏற்றி அவமானப்படுத்தித் தண்டித்ததைக் கண்டிப்பதாகக் கூறி உயிர் நீத்தவர் பலர். கொள்கைக்காக உயிர் நீத்தவர் பலர், குலத்திற்காக உயிரைக் கொடுத்தவர் பலர். இயேசு தன் உயிரைக் கொடுத்தபின் உலகமே பாராட்டி மகிழும் எனத் திட்டமிடவில்லை. கொள்கைக்காகவும் குலத்திற்காகவும் உயிரை துச்சமென மதித்து தியாகம் புரிந்த இலட்சியவாதியாகிய தன்னைப் புகழும் என்று அவர் ஆசைப்படவில்லை.

பலருக்காகவும் பலருடைய மீட்புக்காகவும் தம்முயிரைத் தியாகம் செய்யஆசைப்பட்டார். அந்த நோக்கோடு உயிரை வழங்கிடவும் அதனால் தன்னில் தொடங்கிய கடவுளின் பணி தடங்கல் இன்றித் தொடரவும் வேண்டுமென விரும்பினார். நான்தான்டா தியாகி நம்பர் ஒன் என்னும் நெஞ்சை நிமிர்த்தும் வீராப்புத் திமிருக்காக இயேசு உயிரைக் கொடுக்க விரும்பவில்லை. தான் தொடர்ந்து ஆற்றிக் கொண்டே இருக்கும் மக்கள் பணி தன் உயிரைக் கொடுப்பதனால் இன்னும் கொஞ்சம் மெருகு ஏறுகிறது என்பதைத் தெரிந்து கொண்டு முழு மனத்துடன் அதைக் கொடுத்திடும் நேரம் பார்த்தார். இந்த மனப்போராட்டங்கள் கெத்சமெனித் தோட்டத்தில் இயேசுவைப் பிழிந்தெடுத்தது.

**ஓடிப்போலாமா? ஒளிஞ்சுக்கலாமா?**

நான்தொடர்ந்து ஒளிந்து கொள்ளவா?

இப்போது நான் வெளியேறி பகிரங்கப் பணி புரிந்தால் அது தற்கொலைக்குச் சமமா?

ஆயுதம் தாங்கும் மக்களின் சக்தியினால் அசுரபலத்து உரோமையரைச் சாய்த்திட முடியுமா? இம் மாதிரியான எண்ண ஓட்டங்கள் இயேசுவின் இதயத்தை பன்மடங்கு துடிக்கச் செய்தன. மாரடைப்பின் பிழிவுகளை எதிர்த்துப் போராடும் இதயத்துத் தசைகள் விரிந்து சுருங்கும் போது வியர்வைக் குளியல் போட்டமாதிரி இயேசுவும் இரத்தக் குளியல் போட்டார்.

ஒருவர் தன் கொலையைத் தானே வீடியோவில் பார்ப்பதைப் போலவே சாவுக்கு ஏதுவான வருத்தமுற்றிருந்தார் இயேசு. இங்கு இயேசுவுக்கு சோதனைவந்தது. முரண்பாடு ஒன்று முளைத்திட்ட போது அதைவிட்டுப் புறம்பே ஓடி விடும் தன்மையாக (Escape Mechanism) அவரது சோதனை இருந்தது என்று வருணித்தாலும் கூடத் தவறில்லை.

மக்கள் பணியாளன் என்கிற அளவில் உயிரைக் கொடுப்பது என்பது நிச்சயமாக்கப்பட்ட ஒன்று.

ஆனால் இப்போது கொடுக்கலாமா? எந்த மாதிரி உயிரைக் கொடுத்தால் தன் மக்கள் பணியில் புதிய மெருகேற்றம் கிடைக்கும்? இந்தச் சோதனையை இரண்டாம் கட்டமாகச் சந்தித்தார். இயேசு கெத்சமெனித் தோட்டத்தில் ஒளிந்திருந்த போது இயேசு சந்தித்த முதல் கட்ட சோதனைதான் என்ன?

ஓடிவிடலாமா?என்பதுதான்!

நாதியற்ற விதத்தில் இயேசு இந்த மரண அவஸ்தையைச் சந்தித்தார். கண் விழித்து இயங்கும் ஒவ்வொரு உயிரின் கருவுக்குள் எழுதப்பட்ட ஒருசேதி இது. நான் சாகவே மாட்டேன், நான் சாகவும் கூடாது.

நான் சாகத்தான் வேண்டுமா? உயிரின் இந்த உள்ளுயிர் தத்துவத்தின் எல்லையைத் தாண்டி, நான் சாகவும் தயார், நான் சாகவே பிறந்துள்ளேன் எனத் தீர்மானித்தார்.

கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளாக ஒன்றாகக் கூடி ஒரே மாதிரி உண்டு உறங்கி உறவுகளைப் பகிர்ந்த மூவர் கூட்டணியான சீடர்கள் நம்பகமானவர்கள் தாம். ஆயினும் இருட்டுநேரப் பயமும் ஒளிந்து கொண்டிருக்கும் டென்ஷனும் எருசலேம் நகரத்துக் குழப்பங்களும் அவர்களைக் கண்மூடச் செய்து விட்டன போலும். இந்த மரண அவஸ்தையின் கோர நிமிடங்களிலும் கூட உங்களால் என்னோடு விழித்துத் தேட விருப்ப மில்லையா? என மூன்று முறை இயேசு தயவாய்க் கேட்டது இயேசுவின் மன உளைச்சலுக்கான சான்று. அந்த மன உளைச்சலின் உச்சக் கட்டத்திலும், இரத்த வியர்வையின் பிசுப்பிசு நாற்றத்திலும் நண்பர்களிடமிருந்து தனித்து விடப்பட்ட அந்தக் கொடுமையான நேரத்திலும், தான் வணங்கிய தெய்வத்தோடு முட்டிப் பார்த்தார், மோதிப் பார்த்தார்.

என் உயிரை இந்த நேரத்தில் பணயம் வைப்பதுசரிதானா? எனக்குச் சரியல்ல எனத் தோன்றுகிறது. குழப்பம் ஒரு புறம், வேட்டை நாய்களாக என்னைத் தேடி அலையும் அரசின் சக்திகள் ஆதிக்க சக்திகள் மறுபுறம்! இவ்வாறெல்லாம் பேசிப் பேசி தன் கடவுளிடமிருந்து ஆலோசனை கேட்டு அழுது புரண்டு புழுதியில் தன் முகம்பட கேவிப்பார்த்தார்.

நொறுங்கிப் போன மனதின் மையத்திலிருந்து புறப்பட்ட ஒரு அழுத்தமான நிதானம் மின்னலாக வீசியது. அப்பா இந்தக் குளறுபடியில் என் ஆசை ஒருபுறம் இருக்கட்டும். உன் ஆசைதான் என்ன? இவ்வாறு தன் அடி மனத்து நிதானத்தில் கிடைத்த பேரொளியைக் கண்ட மாத்திரத்திலேயே இயேசு தெம்புடன் எழுந்தார். அவர் தொடர்ந்து பயணிக்க வேண்டிய திசை தெரிந்தது. நாசரேத்தூர் இயேசுவே! என் மகனே! நீ சாவதற்கான நேரம் இது தான். உன் பணி தொடரட்டும். அதன் விளைவும் பணியும் செழிக்கட்டும். இந்தப் பூமியின் புழுதிக்கு உன் இரத்த விதைகள் தேவை.

பெருமூச்சு விட்ட இயேசு அமைதியாகவும் ஆணித்தரமாகவும் சொன்ன ஒரே வார்த்தை ஓகே! இரத்தக் குளியல் முடிந்தது. இயேசுவும் நிதானமாக எழுந்து தன் சாவைக் கூடக் கொண்டாடத் தொடங்கினார்.





# சுதந்திர தின வாழ்த்துகள் !

அருட்பணி. **ஜேசு**
திருத்தல உதவி தந்தை

ஆகஸ்டு 15 இந்த நாள் 77 ஆண்டுகளுக்கு முன்பு மற்றெல்லா நாடுகளும் உறங்கிக்கொண்டிருந்தபோது நமது இந்தியா விழித்துக்கொண்டிருந்த நாள். எப்போது விடியும், அடிமை விலங்கு ஒடியும், சுதந்திரக் காற்று வீசும் என்று ஒவ்வொரு விநாடியும் கொடுமையை அனுபவித்து காத்துக் கொண்டிருந்த நம் தேசத்து சுதந்திர போராட்ட வீரர்கள் போராட்டத்தில் சுடப்பட்டும் தூக்கிலிடப்பட்டும் அடிபட்டும் வன்புணர்வு செய்யப்பட்டும் இறந்து போன சாந்தி அடையாத பல ஆன்மாக்கள் அமைதி அடைந்த நாள். இந்தியா என் நாடு, என் தேசம் ஒரு சுதந்திர தேசம், இங்கு வாழ்கிற எல்லோரும் என் சகோதர சகோதரிகள், இங்கு யாரும் யாருக்கும் அடிமை இல்லை என்று சூளுரைத்து அடிமைப்படுத்திய அடிமைப்படுத்த நினைக்கும் அந்நிய சக்திகளுக்கு சாவு மணி அடித்து அடிமைத் தனத்துக்கு இரவில் கல்லறை கட்டி அடக்கம் செய்து விட்டு ஆர்ப்பரிப்போடு சுதந்திர விடியலை ஆரத் தழுவிக்கொண்டு விழித்திருந்த நாள் ஆகஸ்டு 15 . இனிய சுதந்திர தின விழா வாழ்த்துகள்!.

## முன்னேறினோம்......

கொண்டாடினோம், விடியும் வரை மட்டுமல்ல விடிந்த பின்னும் கொண்டாடினோம். சுதந்திரம் பெற்ற நாள் முதலாய் உழைத்தோம் வளம் பெருக்கினோம். எல்லோருக்கும் எல்லாம் கிடைக்கின்ற வாழ்வை நோக்கி வீறு நடைபோட்டோம். எத்தனை எத்தனை வளர்ச்சிகள் !

உலகப் புகழ் பெற்ற பாடசாலைகள், விண்வெளி, கடல்சார் புவியியல் அணு ஆராய்ச்சிக் கூடங்கள், மருத்துவ ஆராய்ச்சி பல்கலைக்கழகங்கள், விவசாய புரட்சிகள், பாதுகாப்பு படைகளுக்கான ஆயுதங்கள் தயாரிப்பு மற்றும் பயிற்சிகள் தொழிற் படிப்பு ஆன்மீக ஆராய்ச்சிக் கூடங்கள் கட்டுமானங்கள், கலைகள் பல கற்பிக்கும் பாடசாலைகள், எல்லா இடங்களையும் இணைக்கும் சாலைகள், இரும்புப் பாதைகள் என வளர்ந்த நாடுகளோடு போட்டி போட்டுக்கொண்டு எல்லாத் துறையிலும் சாதித்துக் கொண்டிருக்கும் நம் தாய்த் திருநாட்டின் குடி மக்கள் என்பதில் இன்று நாம் பெருமையடைகிறோம்.

## பின்னடைவோம்....

எல்லாத் துறைகளிலும் வளர்ந்து எல்லாத் துறைகளையும் வளர்த்துக்கொண்டிருக்கின்ற நாமும் நம் நாட்டுத் தலைவர்களும் சில துறைகளில் பின்னடைய வேண்டியிருக்கிறது. சாதி சமய இன மொழி சண்டைகளை உருவாக்கும் துறை, பொதுத்துறைகளை தனியார் மயமாக்கும் துறை, வரிகளால் ஏழைகளின் வயிற்றில் அடிக்கும் துறை, நில அபகரிப்பு ஆக்கிரமிப்புதுறை, காடுகள் ஏரிகள் குளங்கள் அழிப்புத்துறை, உணவு மற்றும் அனைத்து பொருட்களிலும் போலிகளை உருவாக்கி கலப்படம் செய்து கொள்ளையடிக்கும் துறை, எல்லோரையும் மதிமயக்கி தள்ளாடச் செய்யும் மது மற்றும் கஞ்சா போதை துறை, நூதன மோசடிகள் துறை, காசுக்காக மட்டுமே செயல்படும் பள்ளி கல்லூரி துறை, சான்றிதழ்களுக்கும் வேலை வாய்ப்பிற்கும் அரசு பொது சேவைக்கும் லஞ்சம் கேட்கும் துறை மற்றும் ஊழல் செய்யும் துறை. இந்த துறைகள் எல்லாம் பின்னடைவைச் சந்தித்து ஒன்றும் இல்லாமல் போனால் நமது இந்தியா நானிலம் வணங்கும் இந்தியாவாக இன்னும் அதிகம் ஒளிரும் என்பதில் ஐயமில்லை.

## உருவாக்குவோம்........

‘என்னால் தினை அளவேனும் நாட்டிற்கு நன்மை ஏற்பட்டால் அதுவே போதும். செத்தொழியும் நாள் எனக்கு திரு நாளாகும்’ என்று தூக்கு மேடையில் முழக்கமிட்ட வீர பாண்டிய கட்டபொம்மனைப் போல, சிறு நன்மையேனும் நம் நாட்டிற்கு செய்ய முற்படுவோம். மாடுகளை மதித்து மனிதர்களை மிதிக்கும், மதத்தினை வைத்து அரசியல் செய்யும் மிருகங்கள் மாறிட, மனித நேயம் போற்றும், எல்லா உயிர்களிடத்தும் அன்பை விதைக்கும் நல்ல தலைமையை, தலைவர்களை நமது குடும்பத்தில் உருவாக்குவோம்.

**வந்தேமாதரம் ! ஜெய்ஹிந்த் !!**

# இளமையின் போராற்றல்

**வாலிப வயது....**

இரு பாலருக்கும் வாலிப வயது என்றாலே ஒரு தனி தைரியம் தான். எல்லாவற்றையும் அப்படியே ஏற்றுக்கொள்ளாமல் நிறைய மாற்றுச் சிந்தனைகளோடு சீர் தூக்கி பார்க்கும் வயது. நண்பர்களுக்காகவும் தோழிகளுக்காகவும் எதையும் செய்யத் துடிக்கும் துடிப்பு மிக்க வயது இது. எந்த உயிருக்கு அநீதி என்றாலும் தட்டிக்கேட்கத் தயங்காத தன்னிகரற்ற பருவம் இது. கல்வியும் காதலும் கடமையும் மாறி மாறி அலைக்கழித்தாலும் அசால்ட்டாக எதையும் சாதித்து விடலாம் என்ற துணிச்சலோடு நெஞ்சை நிமிர்த்தி நடைபோட வைக்கும் வலிமையான பருவம் இது, பலநேரங்களில் `நீ என்ன சொல்வது நான் என்ன கேட்பது என இறுமாப்போடு இரும்புத் தோள்களோடு எதிர்த்து நிற்பவர்களை நடுங்கச் செய்யும் வளமையான பருவம் இது. எண்ணற்ற ஆற்றலை வெளிக்கொணரும் இந்தப் பருவத்தில் சாதனையாளர்கள் சிலர் இருந்தாலும் பலர் பார்வையாளர்களாகவே இருந்துவிடுகிறார்கள்.

**(சாதிக்க (வா) ? சாகவா ?)**

முகநூல் தளங்களிலும் (Facebook)வலையொளியிலும் (You Tube) பட வரியிலும் (Instagram), புலனத்திலும் (Whatsapp) கீச்சகத்திலும்(Twitter) பலவற்றைப் பகிர்ந்து பார்வையாளர்களின் எண்ணிக்கையை பெருக்கிக்கொள்ள, சாதனை செய்கிறேன் என்று நினைத்து விபரீதமான காரியங்களில் ஈடுபட்டு விபத்துகளில் சிக்கிக் கொள்ளும் இளைஞர்களும் இளம்பெண்களும் இன்று பல பேர். சாதிக்க வேண்டும் என்ற ஏக்கம் இருந்தாலும் அவசியம் அல்லாதனவற்றில் ஈடுபட்டு ஆயுளை முடித்துக்கொள்ளும் நம்மில் சில இளைஞர்கள் இளம் பெண்கள். ஓரடி உயர எடுத்து வைத்தால் பல அடிகள் சறுக்கி விழவைக்க வேலை செய்யும் சாதி சமய சங்கிகளோடு போராடி முன்னேறும் இளைஞர்களும் இளம்பெண்களும் நம்மில் சிலர் இருக்கத்தான் செய்கிறார்கள்.

**எளிமையில் தொடங்கும் போராற்றல்**

வாலிபத் தோழர்களே! தோழிகளே! சாதிக்க நாம் இந்த சாதியில் தான் பிறக்க வேண்டும், இந்த சமயத்தில் தான் பிறக்க வேண்டும், இந்த வர்ணம் அல்லது நிறத்தில் தான் இருக்க வேண்டும், இந்த நாட்டில் அல்லது ஊரில் தான் வாழ்ந்திருக்கவேண்டும், உலகின் பெரும்பணக்காரரான எலோன் மஸ்க் (Elon Musk), இந்தியாவின் பணக்காரரான முகேஷ் அம்பானி, தமிழ் நாட்டின் பணக்காரரான கலா நிதிமாறன், இவர்களின் மகனாகவோ மகளாகவோ தான் பிறந்திருக்க வேண்டும் என்கிற அவசியமில்லை. இன்று நம் இளைஞர்கள் இளம் பெண்களில் பலர், நம் அப்பா அம்மா சொத்து சேர்த்து வைக்கவில்லையே என்று சலிப்புணர்வு கொண்டு உழைக்க, உயர மறுத்து விடுவதும் உண்டு.

எல்லோரும் சாதனையாளர்களாக இந்த உலகில் பிறக்கவில்லை. சாதனையாளர்கள் ஆவதும் சரித்திரத்தை புரட்டிப் போடுவதும் புரட்சிகள் செய்வதும் வீரனாய் மாறுவதும் வெற்றிகள் குவிப்பதும் நாயகனாவதும் அல்லது வீணாய்ப் போவதும் எளிமையான தொடக்கத்தில் துவங்கி வாழ்வதிலும் வளர்வதிலும் வளரவைப்பதிலும் இருக்கிறது.

**போராற்றலின் உருவங்கள்..**

2000 ஆண்டுகள் கடந்தபின்னும் இன்றும் பலபேர் தனக்காக உயிரைக் கொடுக்கும் அளவிற்கு, அன்பையும் இரக்கத்தையும் எதிரிகளுக்கும் மன்னிப்பையும் வாழ்ந்து காட்டி, சமய சமூக பொருளாதார ஆன்மீக புரட்சிக்கருத்துக்களையும் விதைத்த, நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து பிறந்தது மாட்டுத் தொழுவம். பழைய ஏற்பாட்டில் தந்தையாம் கடவுள் இஸ்ரயேல் மக்களை பல்வேறு நாட்டு அரசர்களின் அடிப்படியிலிருந்து மீட்க தேர்ந்தெடுக்கப் பட்டவர்களில் பெரும்பாலானோர் இளைஞர்களும் இளம் பெண்களும் ஆவர். கிதியோன் சிம்சோன், யூதித்து, தாவீது மற்றும் இறைவாக்கினர்களில் பலர் எளிமையில் ஏழ்மையில்

பிறந்தவர்கள். அடிமைத்தனத்தைக் கண்டு உள்ளம் குமுறிக்கொதித்தெழுந்த இந்த இளம் வீரர்களின் உள்ளங்களில் தங்கள் மக்களுக்கு சுதந்திரத்தை கொடுக்க வேண்டும் என்ற வேள்வித் தீ பற்றி எரிந்து கொண்டிருந்தது.

நாம் வாழும் இந்தச் சமூகத்திலும் இன்னும் அடிமைத் தனத்தமும் அடிமைப் படுத்தும் தீய சக்திகளும் இல்லாமல் இல்லை. அவற்றை எதிர்த்து அங்கொருவரும் இங்கொருவருமாய் போராடாத இளைஞர்களும் இளம்பெண்களும் இல்லாமல் இல்லை. மலாலா, பாகிஸ்தான் நாட்டைச் சேர்ந்த இளம்பெண் பெண். கல்விக்காக குரல் கொடுத்து குண்டடி பட்டும் இன்னும் அதிகமாய் குரல் கொடுத்துக் கொண்டுதான் இருக்கிறார். கிரேட்டா தன்பர்க் ஸ்வீடன் நாட்டு அரசாங்கம் இயற்கையை பாதுகாக்க குறைவான நடவடிக்கை எடுப்பதை சுட்டிக் காட்டி தன்னுடைய பள்ளியில் போராட்டத்தை துவங்கினார். மனிதர்களின் பேராசையால் மாறிவரும் இயற்கைச்சூழலை, இயற்கையை தங்களின் அடிமையாக நினைத்து என்ன வேண்டுமானாலும் செய்யலாம் என்று நினைப்பவர்களின் குரல் வளையை பிடிக்கிறது இவரது போராட்டம்.

இளைஞர்கள் இளம் பெண்களின் மாபெரும் சக்தியை உலகிற்கு எடுத்துக்காட்டி, அத்தனை அரசியல் சக்திகளையும் பெருநிறுவனங்கள் (Corporate)போர்வையில் செயல்படும் தீய சக்திகளின் இதயத் துடிப்பையும் சோதித்துப் பார்த்தது மெரினாவில் நடந்த கலாச்சாரத்தை (ஜல்லிக்கட்டு அல்லது ஏறு தழுவுதல்) காக்கும் போராட்டம்.

குழுவாகவும் சரி, தனி ஆளாகவும் சரி தாங்கள் விரும்பும் மாற்றத்தை கொண்டுவரும் பேராற்றல் இளமைக்கு உண்டு.

உங்களோடு பேசுங்கள், இளைய சகோதரனே சகோதரியே! அவ்வாறு பேச மறுத்தால் உங்களைப் பற்றி நன்கு அறிந்த அறிவாற்றல் மிக்க ஒருவரின் ஆலோசனையை கேட்க மறுக்கிறீர்கள் என்று பொருள். உங்களை நீங்களே நம்பாமல் போனால் மற்றவர்களும் கடவுளும் உங்களை எப்படி நம்புவார்கள். நம் தாய் தந்தையர்கள் செல்வமில்லாமல் இருந்தால் அது நம் குற்றமல்ல, நாம் உழைத்து அதை மாற்ற முயற்சிக்க வில்லை என்றால் அது நம் சாபம். ஒரு வேளை நம் பெற்றோர் செல்வந்தர்களாக இருந்தார்கள் என்றால் அது நம் புண்ணியம் அல்ல. அந்த செல்வத்தோடு செல்வம் சேர்க்க உழைத்து பலருடைய வாழ்வில் இல்லாமையை வறுமையை இல்லாமல் ஆக்க இரக்கச்செயல்கள் புரிவதுதான் புண்ணியம்.

இளமைக்கு தடைகள் என்று எதுவும் இல்லை. தவறுகளில் தடம் மாறாத வரை, நினைக்கும் மாற்றங்கள் நிகழும் நிலை மாறாமல் நின்று போராடும் வரை, இளைஞர்களே, இளம் பெண்களே, உங்களுடைய பேராற்றல் இந்த உலகத்தின் விலை மதிக்க முடியாத பொதுச் சொத்து. உங்களுடைய முகங்கள் இந்த பிரபஞ்சத்தின் நேற்றைய இன்றைய மற்றும் நாளைய பிரதிபலிப்புகள். இந்த உலகத்தின் எந்த சக்தியும் உங்கள் ஆற்றல் இலட்சியம் புத்துணர்ச்சி மற்றும் துணிவிற்கு ஈடுகிடையாது.




*உனக்கான இலக்கை நிர்ணயம் செய்...*
*அந்த இலக்கை நோக்கி பயணம் செய்...*
*பயணத்தின் போது வேகம் கொள்...*
*வேகத்தோடு விவேகமும் கொள்..*
*தடைகள் வரலாம் தாண்டிச் செல்..*
*பிழைகள் ஏற்படலாம் திருத்திக்கொள்...*
*தோல்விகள் காணலாம் கற்றுக் கொண்டதை பயிற்சி செய்..*
*பயிற்சியோடு முயற்சியும் செய்...*
*உனக்கான இலக்கை தொட்டுவிடலாம்.*
*(கவிஞர் கலா பாரதி)*
*உனக்குள்ளே பேராற்றல் உண்டு !*
*உன்னை வெல்ல யாருண்டு?*

தொடரும்.....

# சொல்லில் விவேகம் வேண்டும்

**பகலுணவு வழங்குவதில் வந்த சிக்கல்**

வயது முதிர்ந்த மூதாட்டி ஒருத்தி உணவு விடுதி நடத்தி வந்தாள். காலையில் அவள் விடுதியில் கிடைக்கும் அப்பம் மிகமிகச் சுவையானதாக இருக்கும். அந்த விடுதிக்கு வரும் அனைவரும் அதனை விரும்பிக் கேட்டு வாங்கி உண்பர். அப்பத்துக்குச் சர்க்கரையும் பாலும் துணைப் பொருள்களாக அளிப்பாள்.

ஒருசமயம் சர்க்கரை விலை சற்றுக் கூடியது. அப்பத்திற்குப் பெறுகிற விலைக்குச் சர்க்கரை கொடுப்பது அம் மூதாட்டிக்குச் சற்றுச் சிரமமாக இருந்தது. அதிக விலை கொடுத்துச் சர்க்கரை வாங்கினாலும் அப்பத்தின் விலையைக் கூட்ட அவள் விரும்பவில்லை. எனவே `அப்பத்திற்குச் சர்க்கரை இல்லை எனக் கூற விரும்பினாள்.

கடைக்கு வழக்கமாக வந்து சாப்பிடும் ஒருவரை அழைத்து. 'அப்பத்துக்குச் சர்க்கரை இல்லை என அறிவிப்பு அட்டை ஒன்றை எழுதிவரச் சொன்னாள். அவர் அதன் அடிப்படையில்

'இன்று முதல் அப்பத்துக்குச் சர்க்கரை இல்லை' என ஓர் அறிவிப்பு அட்டை எழுதிவந்தார். அம் மூதாட்டி அதனைக் கடையில் தொங்கவிட்டாள்.

காலையில் சாப்பிடவந்த ஒருவர் ஓர் அப்பம் வாங்கிச் சாப்பிட்டார். சர்க்கரை இல்லாமலே சாப்பிட்டார். இரண்டாவதாக ஓர் அப்பம் கேட்டார். அவள் இரண்டாவது அப்பம் கொடுத்தாள். அவர் "அம்மா! அப்பத்துக்கு சர்க்கரைக் கொடு" எனக் கேட்டார்.

அம் மூதாட்டி ''அறிவிப்புப் பலகையைப் பார்த்தீர்களா?'' என்று கேட்டாள். அப்பம் வாங்கியவர் "பார்த்தேன்! படித்தேன்! அதன் பிறகுதான் சர்க்கரை கேட்டேன்" என்று கூறினார்.

"அதைப் படித்து விட்டுமா கேட்கிறீர்?" என்றாள் அம் மூதாட்டி.

''ஆமாம்... அறிவிப்பு அட்டையில் என்ன எழுதி இருக்கிறது? 'இன்று முதல் அப்பத்துக்குச் சர்க்கரை இல்லை என்று தானே எழுதியிருக்கிறது. இரண்டாவது அப்பத்துக்குத்தானே நான் சர்க்கரை கேட்கிறேன்" என்றார்.

''ஐயா! அப்படியா பொருள் கொள்கிறீர்கள்? சரி! உங்களுக்கு இன்று சர்க்கரை கொடுத்து விடுகிறேன். நாளை அறிவிப்பு அட்டையில் எழுதியிருப்பதை மாற்றி விடுகிறேன்" என்று கூறினாள்.

அறிவிப்பு அட்டை எழுதியவரை அழைத்தாள். ஐயா அறிவிப்பு அட்டையில் அப்பத்துக்கு " இன்று முதல் சர்க்கரை இல்லை " என எழுதிவிடுங்கள்" என்றாள். அந்த நாள் முதல் அப்பத்துக்குச் சர்க்கரை இன்றி விற்கத் தொடங்கினாள். காலைச் சிற்றுண்டிச் சிக்கல் இவ்வாறு தீர்ந்தது.

**ஒப்புக்கொண்டபடி செய்**

அன்று மதியம் வழிப்போக்கன் ஒருவன் அந்த உணவு விடுதிக்குள் நுழைந்தான். மூதாட்டியிடம் ஐந்து பணம் கொடுத்து விட்டு ''அம்மா எனக்கு அதிகமான பசியாக இருக்கிறது. எலுமிச்சங்காய் அளவு சோறாவது எனக்குச் சீக்கிரமாகப் போடு" என்றான்.

மூதாட்டி ''நீ கேட்டபடியே'' எலுமிச்சங்காய் அளவு சோறு போடுகிறேன் என்று கூறினாள்.

ஒரு வாழை இலையை விரித்து தண்ணீர் தெளித்து. எலுமிச்சங்காய் அளவு சாதம் மட்டும் உருட்டி அவன் இலையில் போட்டாள்.

அதைப் பார்த்ததும் வழிப்போக்கன் "இது எப்படி என் வயிற்றுக்குப் போதும்? வயிற்றுப் பசிக்குத்தானே சோறு சாப்பிடுகிறோம்? " என்றான்.

“ நீ கேட்டபடி எலுமிச்சங்காய் அளவு சோறு போட்டு விட்டேன். விரும்பினால் சாப்பிடு! இல்லையானால் எழுந்து போ!” என்று சொன்னாள்.

“அப்படியா? எனக்கு இது வேண்டாம். நான் கொடுத்த ஐந்து பணத்தைத் திருப்பிக் கொடு. நான் போகிறேன்'' என்றான் வழிப்போக்கன்.

உணவு விடுதிக்கு உரியவள் ஐந்து பணத்தைத் திருப்பிக் கொடுக்க மறுத்து விட்டாள்.

வழிப்போக்கன் மரியாதை ராமனைத் தேடிச் சென்றான். நீதிபதியான மரியாதை ராமனிடம் நடந்ததைக் கூறி முறையிட்டான். நீதிபதி உணவு விடுதி நடத்தி வந்த மூதாட்டிக்கு ஆள் அனுப்பி அழைத்து வரச் செய்தார்.

விடுதிக்குச் சொந்தக்காரியான அம் மூதாட்டி நீதிபதியின் முன் நின்று “ஐயா! வழிப்போக்கன் கேட்டபடி அவன் கொடுத்த பணத்திற்குச் சோறு போட்டு விட்டேன்'' என்று கூறினாள். அத்தோடு தான் இலையில் உருட்டிப் போட்ட எலுமிச்சங்காய் அளவு சோற்று உருண்டையையும் சாட்சியமாக எடுத்துக் காட்டினாள்.

அதை எல்லாம் தெரிந்து கொண்டபிறகு நீதிபதி மரியாதை ராமன் புன்னகை தவழ “அம்மா! நீ என்ன ஒப்புக் கொண்டாய்? எலுமிச்சங்காய் அளவு சோறு போடுவதாகத் தானே ஒப்புக் கொண்டாய்? நீ போட்ட இந்த சோற்றுப் பருக்கை ஒன்றே ஒன்றாவது எலுமிச்சங்காய் அளவு இருக்கிறதா பார்! ஆகவே வழிப்போக்கன் கொடுத்த பணத்தைத் திருப்பிக் கொடுத்துவிடு! அல்லது எலுமிச்சங்காய் அளவு பருமன் உள்ள ஒரு சோற்றுப் பருக்கையையாவது போடு” என்று தீர்ப்பு வழங்கினார். சொல்லின் நுணுக்கத்தை உணர்ந்த உணவு விடுதிக்கு உரிமைக்காரியான மூதாட்டி அந்த அளவு பருமனாகும் சோற்றுக்கு உரிய அரிசிக்கு நான் எங்கே போவேன்? என்று கூறி வழிப்போக்கன் கொடுத்த ஐந்து பணத்தைத் திருப்பிக் கொடுத்து விட்டு நீதிக்கு அடிபணிந்து நடந்தாள்!

*போன மாசம் 45 கிலோ இருந்தேன், இப்போ 50 கிலோ இருக்கேன். போட்டு இருக்குற பேண்ட்டு சைசும் மாறல, சர்ட் சைசும் மாறல....*



*அப்ப கண்டிப்பா அறிவுதான் வளர்ந்து இருக்கும்.*



# நம்முடன் தூய ஆவியார்

## 3. தூய ஆவியார் ஓர் உயர்திணை

**ரோனா ஆல்பர்ட்**

தூய ஆவி என்பது முன்னரே குறிப்பிட்டபடி ஓர் அஃறிணைச் சொல். தூய ஆவியார் என்பதே உயர்திணை ஒரு நபரைக் குறிக்கும் சொல். அவர் ஆள் தன்மை உடையவர் மட்டுமல்ல வல்லமையுடையவர். மூவொரு இறைவனில் மூன்றாம் ஆளாக விளங்குபவர். தந்தையோடும் மகனோடும் ஒன்றாக ஆராதனையும் மகிமையும் பெறுகின்றவர். இறைவாக்கினர்களும் இஸ்ரயேல் அரசர்களும் இன்ன பிற ஞானிகளும் அவருடைய வல்லமை யோடே சிறப்பாக இயங்கினார்கள். அவர் வல்லமையே இன்னும் நம்மையும் இயக்கிக் கொண்டிருக்கிறது என்பதை இறைஞானம் உள்ளவர்கள் அறிவார்கள்.

இன்றைய கால கட்டத்தில் தூய ஆவியானவர் மறைக்கப்பட்ட கடவுளாக இருந்தாலும் அவர் `திடீர்க் கடவுள்அல்ல. நம்முடைய விவிலிய பொது மொழி பெயர்ப்பு பழைய ஏற்பாட்டு நூலிலே 142 முறையும் புதிய ஏற்பாட்டிலே 311 முறையும் 'ஆவி' என்ற சொல் வாயிலாக அவர் குறிப்பிடப்படுகிறார். புதிய ஏற்பாட்டில் 'தூய ஆவி' என்ற சொல் 198 இடங்களிலும் 'கடவுளின் ஆவி' என்ற சொல் 13 இடங்களிலும் 'கிறிஸ்துவின் ஆவி' என்ற சொல் 2 இடங்களிலும் கூறப்பட்டுள்ளன. விவிலியத்தில் 'ஆவி' எனக் குறிப்பிடப்பட்டுள்ள வார்த்தை 'ரூவக்' என்ற எபிரேய வார்த்தையிலிருந்தும், 'நியுமா' என்ற கிரேக்க வார்த்தையிலிருந்தும் வருகிறது. இந்த வார்த்தைகள் பெரும்பாலும் கடவுளுடைய சக்தியை அதாவது இறை ஆவியைக் குறிக்கின்றன. (தொ.நூ.1:2).

இறை ஆவி என்பது கடவுளின் இயல்பையோ அவருடைய தன்மையையோ குறிப்பிடவில்லை. மாறாக, கடவுளின் செயல்களையே குறிக்கிறது. பழைய ஏற்பாட்டில் ஆவியானது 'இறைவனின் ஆவி' இறைவனின் மூச்சு 'இறைவனின் குரல்' 'ஆண்டவரின் வாக்கு' எனக் குறிப்பிடப்பட்டாலும் இவையனைத்தும் இறைவனின் உடனிருப்பை உணர்த்துவதாகவே உள்ளன. அஃறிணையில் இச்சொற்கள் கையாளப்பட்டாலும் உயர் திணையில் மூவொரு இறைவனில் மூன்றாம் ஆளாகிய தூய ஆவியானவரையே குறிப்பிடுவதாகக் கொள்ள வேண்டும். தூய ஆவியானவர் யார்? என்பதைக் குறித்து பல தவறான கருத்துக்கள் நிலவுகின்றன. தூய ஆவியார் ஏதோ ஒரு மாயமான சக்தி என்றும் இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்களுக்காக கடவுளால் அளிக்கப்படும் ஆள் தத்துவம் இல்லாத சக்தி என்றும் நினைக்கின்றனர். தூய ஆவியாரைக் குறித்து விவிலியம் என்ன கூறுகிறது என்று ஆய்வோமானால் அவரை இறைவன் என்றே பறை சாற்றுகின்றது. மேலும் தூய ஆவியார் தெய்வீகத் தன்மை உடையவர், சிந்தை உணர்வுகள் மற்றும் சித்தம் அனைத்தும் உடைய ஒரு நபர் என்றும் அறிவிக்கிறது. தூய ஆவியார் இறைவன் என்பதற்கான செய்திகள் விவிலியத்தில் பல இடங்களில் தெளிவாகக் காணப்படுகின்றன. எடுத்துக்காட்டாக திருத்தூதர் பணிகள் நூலில் பேதுரு அனனியா விடம் "அவன் ஏன்

தூய ஆவியாரிடத்தில் பொய் கூறினான்" என்று கடிந்து கொள்வதோடு ''நீ மனிதரிடமல்ல கடவுளிடமல்லவா பொய் சொன்னாய்'' (தி.ப. 5: 34) என்று கண்டிக்கிறார். இது தூய ஆவியினிடத்தில் பொய் கூறுவது கடவுளிடத்தில் பொய் கூறுவதாகும் என்பதைக் காட்டுகின்றது. புனித பவுல் கொரிந்தியருக்கு எழுதிய திருமடலில் தம்மிடம் அன்பு கொள்ளுகிறவர்களுக்கென்று கடவுள் ஏற்பாடு செய்தவை கண்ணுக்குப் புலப்படவில்லை செவிக்கு எட்டவில்லை மனித உள்ளமும் அதை அறியவில்லை. இதைக் கடவுள் தூய ஆவியாரின் வழியாக நமக்கு வெளிப்படுத்தினார் "(1கொரி 2:910) என்று கூறுகிறார். தூய ஆவியானவர் சிந்தை உணர்வுகள் சித்தம் உடையவராயிருப்பதால் அவர் தெய்வீகத் தன்மை வாய்ந்தவர் என்று அறியப்படுகிறது **"தூய ஆவியார் சிந்திக்கிறவர் அறிகிறவர்:** தூய ஆவியாரே அனைத்தையும் துருவி ஆய்கிறார் கடவுளின் ஆழ்ந்த எண்ணங்களையும் அறிகிறார்" (1கொரி 2:10)

**தூய ஆவியாரைத் துக்கப்படுத்த முடியும்:** "கடவுளின் தூய ஆவியார்க்குத் துயரம் வருவிக்காதீர்கள். மீட்பு நாளை முன்னிட்டு உங்கள் மீது பொறிக்கப்பட்ட முத்திரையாக அவர் இருக்கிறார்" (எபே 4:30)

**தூய ஆவியார் நமக்காகப் பரிந்து பேசுகிறவர்.** "தூய ஆவியார் நமது வலுவற்ற நிலையில் நமக்குத் துணை நிற்கிறார். ஏனெனில், எதற்காக எப்படி நாம் இறைவனிடம் வேண்டுவது என்று நமக்குத் தெரியாது. தூய ஆவியார் தாமே சொல் வடிவம் பெற முடியாத நம்முடைய பெருமூச்சுகளின் வாயிலாய் நமக்காகப் பரிந்து பேசுகிறார்; உள்ளங்களைத் துருவி ஆயும் கடவுள் தூய ஆவியாரின் மன நிலையை அறிவார்; தூய ஆவியாரும் கடவுளுக்கு உகந்த முறையில் இறை மக்களுக்காகப் பரிந்து பேசுகிறார்" (உரோ 8:2627)

**தூய ஆவியார் தமது சித்தத்தின் படி தீர்மானிக்கிறவர் செயல்படுத்துகிறவர் :** "தூய ஆவியார் ஒருவருக்கு ஞானம் நிறைந்த சொல்வளத்தை அருளுகிறார்; இன்னொருவருக்கோ அதே ஆவியார். அறிவு செறிந்த சொல்வளத்தை அளிக்கிறார். அதே ஆவியார் வேறொருவருக்கு நம்பிக்கை அருளுகிறார். அந்த ஒரே ஆவியார் மற்றொருவருக்குப் பிணி தீர்க்கும் அருள் கொடையையும் அளிக்கிறார். தூய ஆவியார் ஒருவருக்கு வல்ல செயல் செய்யும் ஆற்றலையும் இன்னொருவருக்கு இறை வாக்குரைக்கும் ஆற்றலையும் வேறொருவருக்கு ஆவிக்குரியவற்றைப் பகுத்தறியும் ஆற்றலையும் மற்றொருவருக்கு பல்வகைப் பரவசப் பேச்சுப் பேசும் ஆற்றலையும் பிறிதொருவருக்கு அப்பேச்சைவிளக்கும் ஆற்றலையும் அருளுகிறார். அந்த ஒரே ஆவியாரே இவற்றையெல்லாம் செயல்படுத்துகிறார். அவரே தம் விருப்பம் போல் ஒவ்வொருவருக்கும் பகிர்ந்தளிக்கிறார் (1 கொரிந்தியர் 12:7–11)

**தூய ஆவியார் கற்பிக்கிறவர் நினைவூட்டுகிறவர்** "என் பெயரால் தந்தை அனுப்பப் போகிற தூய ஆவியாராம் துணையாளர் உங்களுக்கு அனைத்தையும் கற்றுத் தருவார் ;நான் கூறிய அனைத்தையும் உங்களுக்கு நினைவூட்டுவார்" (யோவா 14:26)

**தூய ஆவியார் இயேசுவுக்கு சான்று பகர்கிறவர்:** ''தந்தையிடமிருந்து நான் அனுப்பப் போகிற துணையாளர் வருவார். அவரே தந்தையிடமிருந்து வந்து உண்மையை வெளிப்படுத்தும் தூய

ஆவியார். அவர் வரும் போது என்னைப்பற்றி சான்று பகர்வார்" (யோவா 15:26)

**தூய ஆவியார் வழி நடத்துகிறவர்:** "உண்மையை வெளிப்படுத்தும் தூய ஆவியார் வரும் போது அவர் முழு உண்மையை நோக்கி உங்களை வழி நடத்துவார்" (யோவா 16:13)

**தூய ஆவியார் திட்டமிடுகிறவர்:** "அவர்கள் நோன்பிருந்து ஆண்டவரை வழிபடும் போது தூய ஆவியார் அவர்களிடம், 'பர்ன பாவையும் சவுலையும் ஒரு தனிப்பட்ட பணிக்கென நான் அழைத்திருக்கிறேன். அந்தப் பணிக்காக அவர்களை ஒதுக்கிவையுங்கள்' என்று கூறினார். (தி.ப.13:2) **தூய ஆவியார் எச்சரிக்கிறவர்:** "சிறை வாழ்வும் இன்னல்களும் எனக்காகக் காத்திருக்கின்றன என்று தூய ஆவியார் ஒவ்வொரு நகரிலும் என்னை எச்சரித்து வருகிறார்" (தி.ப. 20:23)

**தூய ஆவியார் சரியில்லாதவற்றை தடுக்கிறவர்:** பின்பு ஆசியாவில் இறை வார்த்தையை அறிவிக்காத வாறு தூய ஆவியார் தடுக்கவே அவர்கள் பிரிகியகலாத்தியப் பகுதிகளைக் கடந்து சென்றனர். அவர்கள் மீசியா அருகே வந்து பித்தினியாவுக்குச் செல்ல முயன்ற போது இயேசுவின் ஆவியார் அவர்களை அங்குப் போகவிடவில்லை (தி.ப.16:6–7)

**தூய ஆவியார் கட்டளையிடுகிறவர்:** "தூய ஆவியார் பிலிப்பிடம் `நீ அந்தத் தேரை நெருங்கிச் சென்று அதனோடு கூடவே போ என்றார்" (தி.ப. 8:29). "தூய ஆவியார் என்னிடம் 'தயக்கம் ஏதுமின்றி அவர்களோடு செல்' என்று கூறினார் (தி.ப.11:12)

**தூய ஆவியார் அறிவுறுத்துகிறவர்:** "தூய ஆவியார் கூறுவது: `இன்று நீங்கள் அவரது குரலைக் கேட்பீர்களென்றால் பாலை நிலத்தில் சோதனை நாளன்று கிளர்ச்சியின் போது இருந்தது போல, உங்கள் இதயத்தைக் கடினப்படுத்திக் கொள்ளாதீர்கள்" (எபி 3:7) **தூய ஆவியார் பதில் உரைப்பவர்:** பின்பு விண்ணகத்திலிருந்து ஒரு குரலைக் கேட்டேன்; "இது முதல் ஆண்டவரோடு இணைந்த நிலையில் இறப்போர் பேறுபெற்றோர்" என எழுது என்று அது ஒலித்தது. அதற்கு தூய ஆவியார், "ஆம் அவர்கள் தங்கள் உழைப்பிலிருந்து ஓய்வு பெறுவார்கள்; ஏனெனில், அவர்களின் செயல்கள் அவர்களைப் பின் தொடரும்" என்று கூறினார் (தி.வெ. 14:13) "விவிலிய சான்றுகள் ஆள் தன்மையில் தூய ஆவியார் விளங்குவதை வெளிப்படுத்தினாலும், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நேரடியாகவே தூய ஆவியாரைப் பற்றிஅவர் ஒரு துணையாளர் (யோவா 14:16) உண்மையை வெளிப்படுத்துபவர் (யோவா 14:17)கற்பிப்பவர் (யோவா 14:26)சான்றுபகர்பவர் (யோவா 15:26) வழி நடத்துபவர் (யோவா 16:13) எனப் பல்வேறு வெளிப்பாடுகளை வழங்கியிருக்கிறார்.

மேற்கூறப்பட்ட செய்திகளை ஆராயும் போது தூய ஆவியாரைப் பற்றிய சில முக்கிய கருத்துக்களை நாம் அறிய முடியும். தூய ஆவியார் இறைவனால் அனுப்பப்படும் துணையாளர் (அதாவது தந்தையோ இயேசுவோ அல்ல இன்னொருவர்) என்றென்றைக்கும் நம்மோடு கூட இருப்பவர். உலகத்தாரால் உலக மூளையால் அவரை ஆராய முடியாது. நமக்குள்ளே தங்கியிருப்பதால் நம்மால் அவரை அறிய முடியும். அவர் நமக்கு போதித்து இயேசுவின் வார்த்தைகளை நினைவூட்டுவார். அவர் இயேசு குறித்து சான்று பகர்வார். அவர் நம்மை உண்மைக்குள் வழி நடத்துவார்.

அவர் சுயமாக எதையும் பேச மாட்டார். வரப்போகும் காரியத்தை முன்னறிவிப்பார். தூய ஆவியார் வல்லமை மிகுந்த ஆள் தன்மை கொண்டவர், உயர் திணையாளர் என்பதை பின்வரும் குறிப்புகளாலும் அறியலாம்.” தூய ஆவியார் இறைவன், இறைத்தன்மை உடையவர் நமக்காக வீரமுடன் பேசுபவர் (மாற்கு 13:11) எல்லாம் வல்லவர் (லூக்கா 1:35) என்றும் இருக்கும் நம் துணையாளர் (யோவான் 14:16) உண்மையின் ஆவியானவர் (யோவா 14:17) தந்தையிடமிருந்து வருபவர் (யோவா 15:26) சாட்சியம் பகர்பவர் (யோவா 15:26) நம்மை உண்மையை நோக்கி வழி நடத்துபவர் (யோவா 16:12) தந்தையின் சித்தத்தை அறிவிப்பவர் (யோவா 16:14) தந்தையாம் இறைவனால் வாக்களிக்கப்பட்டவர் (தி.ப. 1:4) கொடையாளர் (தி.ப 2:38) வளர்ச்சியில் துணை நிற்பவர் (தி.ப.9:31) கட்டளையிடுபவர் (தி.ப.13:2) நம்மை வழி நடத்துபவர் (தி.ப.16:6) அதிசயங்களைச் செய்பவர் (தி.ப.19:6) கடவுளின் அன்பை நம் உள்ளங்களில் பொழிபவர் (உரோ 5:5) உள்ளுயிராய் இருப்பவர் (உரோ 8:11) நமக்காகப் பரிந்துபேசுபவர் (உரோ 8:26) அனைத்தையும் அறிந்தவர் (1கொரி 2:10) நம்மில் வாழ்பவர்; (1கொரி 3:16) அருட்கொடைகளை அளிப்பவர் (1கொரி 12: 410.) செயலாற்றுபவர் (1கொரி 12:11) கனிகளைக் கொடுப்பவர்(கலா 5:2223) என்றுமுள்ள முடிவில்லாதவர் (எபி 9:14) உணர்வு கொண்டவர் (எபே 14:30) நம்மோடு என்றும் இருப்பவர் (யோவா 16:14)”. இவ்வளவு ஆற்றல்களைக் கொண்டு தூய ஆவியார் வல்லமையாளராகத் திகழ்கிறார். நம்முடன் பேசுபவராக நமக்குப் போதிப்பவராக நம்மை வழி நடத்தும் நமக்குள் இருக்கும் ஒரு நபராகவே தூய ஆவியார் செயல்படுகிறார்.




(ஆவியார் தொடர்வார்)



**தந்தை:** டேய், நீ நினைக்கற மாதிரி எல்லாம் வாழனும்னா நீ அம்பானி வீட்ல பிறந்திருக்கனும்...

**மகன் :** அப்போ நீங்க அம்பானி ஆன பிறகு என்னை பெத்திருக்கனும்.



# அழியா நாவின் அற்புத பரிந்துரைகளின் சாட்சி

## மேடவாக்கம் பங்கு

எனது மகனுக்கு10 வருடங்களுக்கு மேலாக வறட்டு இருமல் இருந்தது. ஏறி இறங்காத மருத்துவமனை இல்லை. குணம் பெறவே இல்லை. ஏப்ரல் 1 உடம்பு சரியில்லாமல் போனது. இருமல் வரும்போது அவன் படும் வேதனையைப் பார்த்து மன வேதனையோடு இருந்தோம். நான் பாலவாக்கம் கடற்கரை புனித அந்தோணியார் திருத்தலம் போவது வழக்கம். ஒருசெவ்வாய்க் கிழமை மருத்துவரிடம் செல்லும் முன் என் வீட்டில் இருந்தே மன வேதனையோடு அழுது எனது மகன் குணம் பெற்றால் நான் சாட்சி சொல்கிறேன் என்று வேண்டினேன். அதே போல் எனது மகனுக்கு இப்போது அந்த வறட்டு இருமல் நின்று பூரணமாக குணம் பெற்று நன்றாக இருக்கிறார். கடற்கரை புனித அந்தோணியாருக்கு கோடான கோடி நன்றிகள். **மரியே வாழ்க** புனித அந்தோணியாரே வாழ்க வாழ்க.

## மயிலாப்பூர் பங்கு


எனது பெயர் சார்லஸ். நான் ஒரு நிறுவனத்தில் வேலைசெய்துவந்தேன். அந்த நிறுவனத்தில் வேலை செய்யும் போது எனக்கு பணம் பிடித்தார்கள். எனக்கு அந்த பணம் தேவைப் பட்டதால் அலுவலகம் சென்று எழுதி கொடுத்து வந்தேன். அந்த பணத்திற்காக 5 வருடம் அலைந்து வந்தேன் பணம் கிடைக்கவில்லை. மன வேதனைக்கு உள்ளானேன். ஒரு செவ்வாய்க் கிழமை பாலவாக்கம் திருத்தலம் வந்து அந்தோணியாரிடம், மன வேதனையோடு. நான் கஷ்டப்பட்டு உழைத்த பணம் எனக்கு கிடைக்கவேண்டும் என்று வேண்டினேன். கடந்த வாரம் எனக்கு வர வேண்டிய பணம் முழுவதும் கிடைத்து விட்டது. அந்தோணியாரிடம் வேண்டினது வீண் போகவில்லை. கடற்கரை புனித அந்தோணியாருக்கு கோடான கோடி நன்றிகள் மரியே வாழ்க.

எனது மகள் உடல் நலக்குறைவாக இருந்தார். நாங்கள் மருத்துவமனைக்கு அழைத்து சென்று மருத்துவரைப் பார்த்தோம். மருத்துவர் பரிசோதித்துவிட்டு. இவருக்கு அறுவைசிகிச்சை பண்ணவேண்டும். என்று சொல்லிவிட்டார். எங்களுக்கு என்ன செய்வது தெரியவில்லை. அந்தோணியாரிடம் மன வேதனையோடு அழுது வேண்டினேன். அறுவை சிகிச்சை நடக்காமல் குணம் பெற வேண்டும். குணம் பெற்றால் நான் சாட்சி சொல்கிறேன் என்று. இப்போது எந்த ஒரு அறுவைசிகிச்சையும் இன்றி, நலமாய் இருக்கிறார். அந்தோணியாருக்கு கோடான கோடி நன்றிகள். மரியே வாழ்க.

## கொளத்தூர் பங்கு

என் பெயர் தமிழ் மகன். எனது மகன் வீடு கட்ட பணம் இல்லாமல் தவித்துக் கொண்டு இருந்தான். எனக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. நானும் நிறைய பேரிடம் கேட்டுப்பார்த்தேன், எங்கும் கிடைக்கவில்லை. மன வேதனையோடு செவ்வாய்க் கிழமை கடற்கரை புனித அந்தோணியாரிடம் வந்து முழு மனதோடு வேண்டினேன். 'பணம் கிடைத்தால் நான் சாட்சிசொல்கிறேன்' என்று. எனது மகனுக்கு பணம் கிடைத்தது. அந்தோணியாருக்கு கோடான கோடி நன்றிகள்.

*செத்த பின்ன 'சாம்பலா' போறது பெரிய விசயமில்ல...*



*வாழும் போதே மத்தவங்களுக்கு Ex 'சாம்பளா' இருந்துட்டு போகனும் அதான் வாழ்க்கை....*

# வெதுவெதுப்புநிலை மற்றும் காம இச்சைக்கெதிராக

## ( புனிதஅந்தோணியாரின் மறையுரை III )

அருட்பணி. இயேசுஅந்தோணி

### முன்னுரை

புனித அந்தோணியார், பார்வையற்ற மனிதனை ஆண்டவர் இயேசு குணப்படுத்தியதை அடிப்படையாகக் கொண்டு பல்வேறு கோணங்களில் மக்களை வாழ்க்கை மாற்றத்திற்கு அழைக்கிறார். குறிப்பாக இந்த மறையுரையில் அவர் தோபியாவின் கண்களை குருடாக்கிய பறவையின் நிகழ்வை அடிப்படையாகக் கொண்டு வெதுவெதுப்பு நிலை (மந்தநிலை) மற்றும் காம இச்சைக்கெதிராக அற்புதமான மறையுரையை தான் வாழ்ந்த காலத்தில் வழங்கியுள்ளார். ஆன்மீக வாழ்வில் எப்படி மனிதர்கள் படிப்படியாக தங்களது நம்பிக்கை என்கிற ஆன்மீகப் பார்வையை இழந்து பார்வையற்ற மனிதர்களாக மாறுகிறார்கள்? என்பதை விளக்கி நம்பிக்கையில் ஆழமாக ஈடுபடவும் பாவங்களை முற்றிலும் நிராகரிக்கவும் அழைப்பு விடுக்கிறார்.

### தோபியாவின் பார்வை பறிபோன நிகழ்வு:

புனித அந்தோணியார் தோபியாவின் புத்தகத்தில் இருந்து ( 2 :10–11 ) பறவையின் எச்சத்தினால் அவரது பார்வை பறிபோன நிகழ்வைக் கொண்டு வெதுவெதுப்பு நிலையும் மற்றும் காமமும் ஆன்மீகக் குருட்டுத்தனத்தை ஏற்படுத்துகின்றன என்பதை விளக்குகிறார். தோபியா ஒரு நியாயமான மனிதன். தோபியாவின் தலைக்குமேல் இருந்த குருவிகளின் சூடான எச்சம் அவரது கண்களில் விழுந்து படிப்படியாக பார்வையை முற்றும் இழக்க வைத்தன என்ற நிகழ்வின் ஒவ்வொரு கூற்றையும் புனித அந்தோணியார் பின்வருமாறு உவமைப்படுத்தி விளக்குகிறார்.

| | | |
|---|---|---|
| **தோபியா** | : | நியாயமான மனிதரை, மந்த நிலையை குறிக்கிறது. |
| **அடக்கம்** | : | பாவப்பரிகார செயல்களை, தவ முயற்சிகளை |
| **வீடு** | : | உடலின் பராமரிப்பை குறிக்கிறது. |
| **சுவர்** | : | உடலின் இன்பங்களை குறிக்கிறது. |
| **உறக்கம்** | : | கவனக்குறைவின் மந்தத்தை குறிக்கிறது. |
| **கூடு** | : | களைப்புற்ற பாவத்தில் உடன்படும் மனம் |
| **பறவைகள்** | : | வேகமாக தாக்கும் அலகைகளை குறிக்கிறது. |
| **எச்சம்** | : | மனித ஆன்மாவை குருடாக்கும் காமம் மற்றும் பேராசை |

**வெதுவெதுப்பு நிலை : ஒரு ஆன்மீக மந்தம்**

ஆவிக்குரிய அடிப்படையில் ஆன்மீக மந்தத்தனம் என்பது ஒருவரின் நம்பிக்கையில் அலட்சிய நிலையில் இருப்பதைக்குறிக்கும். இரண்டாம்கெட்ட நிலையை குறிக்கும். இது ஆர்வம் மற்றும் அர்ப்பணிப்பு குறைவைக் குறிக்கிறது. ஆன்மீக வாழ்வில் வெதுவெதுப்பான நிலை சாட்சிய வாழ்வில் சுணக்கத்தையும் ஏற்படுத்தும். இப்படிப்பட்ட

ஆன்மீக மந்த நிலை அல்லது தீர்க்கமான நிலைப்பாடெடுக்க தவறும் மனநிலை கடவுளின் நிராகரிப்பிற்கு நம்மை உட்படுத்திவிடும். இந்த வெதுவெதுப்பு நிலை கடவுளுடன் ஒருவர் கொண்டுள்ள உறவில் படிப்படியாக சரிவைக் கொண்டுவருகிறது, என்று புனித அந்தோணியார் எச்சரிக்கிறார். "நீ குளிர்ச்சியாகவோ சூடாகவோ இல்லாமல் வெது வெதுப்பாய் இருப்பதால் என் வாயிலிருந்து உன்னைக் கக்கிவிடுவேன்" (திருவெளிப்பாடு 3:16) என்று இறைவார்த்தை குறிப்பிடுகிறது. இது கடவுளின் தெய்வீக கருணையின் அடிவயிற்றிலிருந்து நமது ஆன்மாவை வெளியேற்றுவதற்கு வழிவகுக்கும் என்று குறிப்பிடுகிறார். மேலும் அவர், "ஆண்டவர்தம் அலுவலை அக்கறையின்றிச் செய்பவன் சபிக்கப் பட்டவன்" (எரே 48:10) என்ற இறைவார்த்தையை அடிப்படையாகக் கொண்டு, அரைகுறை மனம் கொண்டவர்கள் நம்பிக்கை வாழ்வில் வெது வெதுப்புள்ள மனிதர்களை குறிப்பதாகச் சொல்கிறார்.

**பார்வையற்ற தனத்தின் போக்குகள்:** வீட்டிற்கு திரும்புதல்: உடலின் இன்பங்களில் ஆறுதல் தேடுதல் உடல் இச்சைகளுக்கு இணங்கிப்போதலைக் குறிக்கிறது. தோபியா மரித்த உடல்களை அடக்கம் செய்துவிட்டு சோர்வோடு வீட்டிற்கு வந்ததைப்போல வெது வெதுப்பு நிலை மற்றும் காம இச்சை கொண்ட மனிதர்கள் பரிகார முயற்சிகளை செய்வதில் சோர்ந்து போவதால் அவர்கள் மீண்டும் உடல் இன்பங்களை தேடுவதைக் குறிக்கிறது. உண்மையான மனமாற்றத்திற்கு தேவையான முயற்சியில் ஆன்மா களைப்பாகிறது.

**சுவர் அருகில் தங்கி உறங்குதல்** என்பது உடல் இன்பங்களில் சிக்கிக்கொள்வது. சுவர்கள் கற்களை ஒன்றின் மேல் ஒன்று வைத்து சாந்து பூசி கட்டுகிறதுபோல இறுக்கமாகிறது. உறக்கம் என்பது கவனக்குறைவின் உறக்கம். ஆன்மீக தூக்கத்தில் விழுந்து கடவுளின் கடமையைப் புறக்கணித்தலை உணர்த்துகிறது. பாவத்தால் பலவீனப்படுத்தப்பட்ட சோர்ந்து போன மனித மனம் ஆன்மீக உண்மைகளை மறந்து பேராசையால் மற்றும் காமத்தால் சூழப்பட்டுவிடுகிறது. அப்படி மனிதர்கள் சோர்வடைந்து உறங்கும் போது பறவை என்கிற அலகையின் எச்சம் கண்களை குருடாக்குகிறது அவர் கட்டுக்கடங்காத பாலுணர்வை கண்களை குருடாக்கிய பறவையின் எச்சமாக அர்த்தப்படுத்துகிறார். இந்த பாவங்கள் ஆன்மாவுக்கு கொண்டு வரும் அழுக்கை தரக்குறைவைக் குறிக்கிறது. காமம் அல்லது உடல் இச்சை என்பது கட்டுக்கடங்காத பாலுணர்வு மீது கொண்டுள்ள மிக தீவிரமான ஆசை என்று புரிந்து கொள்ளலாம். இந்த கட்டுக்கடங்காத பாலுணர்வை பாவமாக இறைவார்த்தையும் இறையியலும் குறிப்பிடுகிறது.

**பறவைகள்:** மேலும் பறவைகள் மிக வேகமாக பறப்பது "நான் விண்ணுலகிற்கு ஏறிச் செல்வேன். இறைவனுடைய விண்மீன்களுக்கு மேலாக உயரத்தில் என் அரியணையை ஏற்படுத்துவேன், வடபுறத்து எல்லைப்பகுதியிலுள்ள பேரவை மலைமேல் வீற்றிருப்பேன். மேகத்திரள்மேல் ஏறி உன்னதர்க்கு ஒப்பாவேன் " (ஏச 14 : 13 14 ) என்கிற ஆணவத்தை குறிப்பதாக க் குறிப்பிடுகிறார்.

**பறவை கூடு:** இப்படிப்பட்ட பறவை என்கிற அலகை கட்டுகிற கூட்டைப் பற்றி குறிப்பிடும் போது அது தற்பெருமை மற்றும் வெட்கம்கெட்ட பித்தலாட்டம் போன்ற இறகுகளால் கட்டப்பட்ட கூடு என்கிறார். இந்த கூட்டில் இருந்து விழும் பேராசை மற்றும் காமவெறி என்கிற இந்த எச்சம் கண்களை குருடாக்கிவிடும் பேராபத்து கொண்டது . தோபியாவின் குருட்டுத் தனத்தைப்போல காம ஆசைகளில் ஆழ்ந்துள்ள ஆன்மாவும் குருடாகிறது.

இந்தக் குருட்டுத்தனம் கடவுளின் காட்சியை நமது வாழ்வில் மறைக்கின்றது மற்றும் ஆன்மாவை ஆழமான இருளுக்கு இட்டுச் செல்கிறது.

**மனமாற்றத்திற்கு அழைப்பு:** இப்படி குருட்டு நிலையில் உள்ள தோபியாக்கள், கடவுளின் கருணைக்காக குரலெழுப்பி கடவுளை கூப்பிட வேண்டும் என்கிறார். சுவரருகே பார்வையற்ற மனிதனாய் கிடப்பவர்கள் பின்வரும் நான்கு கருத்துக்காக செபிக்க சொல்கிறார்.

**ஒன்று:** எனது கடவுளாக பாதுகாப்பாளராக இருந்து சிலுவையில் இரு கரம் விரித்து தொங்கிய அந்த கரங்களால் கோழி தன் குஞ்சுகளை அரவணைப்பது போல அரவணைத்து கொள்ள

**இரண்டு:** ஈட்டியால் குத்தி ஊடுருவப்பட்ட இயேசுவின் திருவிலாவில் தன்னை வைத்து எதிரிகளிடம் இருந்து காப்பாற்ற

**மூன்று:** கடவுளே நீரே எனது அடைக்கலம் உம்மிடம் நான் தஞ்சம் புகுகிறேன் என்று செபிக்க

**நான்கு:** இயேசுவே தாவீதின் மகனே உமது திருப் பெயரின் பொருட்டு எனக்கு தலைவனாய் இரும். எனது பார்வையற்ற நிலையில் என்னை நோக்கி உமது இரக்கத்தின் கரங்களை நீட்டும் உமது அருள் என்கிற பாலை எனக்கு அருந்த கொடும் இயேசுவே தாவீதின் மகனே என்மேல் இரங்கும் என்று செபிக்க அழைக்கிறார்.

**முடிவுரை** புனித அந்தோணியார் தோபியாவின் பார்வைபறிபோன நிகழ்வைக் கொண்டு அற்புதமாக மனிதர்கள் எப்படி பார்வையற்ற நிலைக்கு தள்ளப்படுகிறார்கள் என்பதையும் அப்படிப்பட்ட குருட்டுத்தனங்களில் இருந்து எப்படி பர்த்திமேயுவைப் போல பார்வையடைய முடியும் என்பதையும் தெளிவாக விளக்கி அகக்கண்கள் திறக்கப்பட பாதை காட்டுகிறார். புனித அந்தோணியார் மந்தநிலை மற்றும் கட்டுக்கடங்காத பாலுணர்வுகளால் ஏற்படும் ஆன்மீக ஆபத்துகளை நினைவூட்டி பார்வைபெற அழைக்கிறார். தோபியாவின் கதையைப் பயன்படுத்தி பாவத்தில் படிப்படியாக விழுவது மற்றும் அதில் இருந்து விடுபடுவதற்கு தெய்வீக அருள் தேவையானது என்பதை தெளிவாக விளக்குகிறார். நமது ஆன்மீக வெது வெதுப்பு நிலை மற்றும் கட்டுக்கடங்காத பாலுணர்வு ஆன்மீக மலட்டுத்தன்மையை, குருட்டு தன்மையை ஏற்படுத்திவிடுகிறது. இந்த அந்தோணியாரின் மறையுரை இன்றளவும் நமது தலைமுறைக்கு முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு நமக்கு பொருந்துவதாக அமைகிறது. அவரது மனமாற்றத்திற்கான அழைப்பு அவசரமானதாகவும் நம்பிக்கையாளர்களை அவர்கள் ஆன்மீக தூக்கத்திலிருந்து தட்டி எழுப்பி உண்மையான மனமாற்றத்துடன் கடவுளின் கருணையை நாடுமாறும் அமைந்துள்ளது.

*இன்று சன்டே... இதை 5 பேருக்கு ஷேர் பண்ணா அடுத்த 7 நாட்களில் இன்னொரு சன்டே வரும்...*




*இல்லையென்றால் அடுத்த 24 மணி நேரத்தில் Monday வரும்*

# அன்னை மரியின் விண்ணேற்பு பெருவிழா

சாவை வென்றவரை கருவில் சுமந்த கன்னியின் உடல் எப்படி கல்லறையில் அடக்கப்பட்டு. கரையானால் அரிக்கப்பட முடியும்? இயேசுவின் வார்த்தைகளை வாழ்வில் கடைப்பிடித்து வாழ்ந்த பல புனிதர்களின் உடல் அழியாமல் இன்றும் சான்றாய் நின்று நம்மை சாட்சிகளாய் வாழ அழைக்கும்போது மனுவுருவான வார்த்தையை தம் திருவயிற்றில் சுமந்த அன்னை மரியாவின் உடலும் ஆன்மாவும் எவ்வாறு பாதாளத்தை காணமுடியும்?

ஆம் அவரது உடல் அழிவுறவில்லை. ஆன்மாவோடும் உடலோடும் அன்னை மரியா விண்ணகம் எடுத்துக்கொள்ளப்பட்டார் என்பதை உலகறிய நம்பிக்கை கோட்பாடாக எடுத்துச்சொன்னார் திருத்தந்தை பன்னிரண்டாம் (12ம்) பத்திநாதர். இன்று நாம் அன்னை மரியாவுக்கு செலுத்துகின்ற உயரிய வணக்கம் அவர் நாசரேத்தில் வாழ்ந்தபோது கிடைத்ததா? என்றொரு வினா எழுப்பி சிந்தித்துப் பார்ப்போம்.

நாசரேத்தில் வாழ்ந்தபோது அன்னை மரியின் கனவு வேண்டுதல் எல்லாமே விடுதலையாகத்தான் இருந்திருக்க வேண்டும். உரோமையர்களால் அடிமையாக்கப்பட்டு அவர்களால் நியமிக்கப்பட்ட குறுநில மன்னர்கள் மற்றும் ஆளுநர்களால் சுரண்டப்பட்டு இரத்தத்தை வியர்வையாய் சிந்தி உழைத்த பணமெல்லாம் வரி என்று எதிரிகளும் சமயவாதிகளும் பறித்துக்கொள்ள மொழி கலாச்சாரம் பண்பாடு ஆன்மீகம் அழிக்கப்பட்டு வீரர்களாலும் கயவர்களாலும் இளம்பெண்கள் சீரழிக்கப்பட்டு கொல்லப்பட்ட அந்த கொடுமையை கண்ட அன்னையின் வேண்டுதல் விடுதலை அன்றி வேறென்னவாக இருக்க முடியும்?

பிறர் துன்பம் தன் துன்பமாய் நினைத்த மரியன்னையின் வயிற்றில் பிறக்க திருவுளமானார் இறைவன். கருவுற்று இருந்த அன்னை மரியின் புரட்சிப்பாடல் இறைவனின் மீட்புத்திட்டத்தையும் இறையாட்சியின் மதிப்பீடுகளையும் நமக்கு விளங்க வைக்கிறது. ஓடிச்சென்று எலிசபெத்துக்கு உதவிய போதும் கானாவூரில் யாரும் கேட்காமலேயே தேவையறிந்து பரிந்துரைத்தபோதும் சிலுவையிலே தன் மகனை கையளித்தபோதும் இந்த உலகத்தின் மீட்பை மக்களின் நிறைவாழ்வை விடுதலை வாழ்வை மட்டுமே எண்ணியிருந்தார் அன்னை மரியா. தன்னலத்தின் நிழல் படாத அன்னை மரியின் உடல் அழியாமைக்குரியது என்பதில் ஐயமில்லை. விண்ணகம் எடுத்துக்கொள்ளப்பட்ட போது உலகின் அவரது சொந்தங்களாகிய நம்மை அவருக்கு விட்டுவிட மனமில்லை. அதனால்தான் இன்றும் அவருடைய காட்சிகள். ஆண்டவனைத் தவிர வேறெவர்க்கும் வேறெதற்கும் அடிமையாகாத அன்னை நாமும் பாவ அடிமை வாழ்வை விடுத்து விண்ணக நிலைவாழ்வை பெற்றுக்கொள்ள அழைக்கிறார். நாம் தயரா?



# வினா விடை போட்டி
# வினாத்தாள் 1

**கோடிட்ட இடம் நிரப்புக:**

1. ______________________இவர்கள் காலத்தில் தான் யூதர்கள் பாபிலோனுக்குச் சிறைபிடித்துச் செல்லப்பட்டார்கள்.
2. ______________________காணிக்கையாகக் கொடுத்தார்கள்.
3. அவர் தூய ஆவி என்னும்__________________உங்களுக்குத் திருமுழுக்குக் கொடுப்பார்.
4. உன் கடவுளாகிய ஆண்டவரை____________________அவர் ஒருவருக்கே
5. ______________________ஆகியோரின் நெறியைவிட உங்கள் நெறி சிறந்திருக்கட்டும்.

**சரியான விடையை தேர்ந்தெடுக்க:**

1. தம் சகோதரரையோ சகோதரியையோ அறிவிலியே என்பவர் எதற்கு ஆளாவார்?

   **1) எரி நெருப்புக்கு 2) எரியும் புதருக்கு 3) எரி நரகத்துக்கு**

2. செபதேயுவின் மகன்கள் யார்?

   **1) யாக்கோபு பேதுரு 2) யோவான் அந்திரேயா 3) யாக்கோபு யோவான்**

3. ஆண்டவருக்காக வழியை ஆயத்தமாக்குங்கள் என்று எந்த இறைவாக்கினர் உரைத்தார்?

   **1) எரேமியா 2) எசாயா 3) ஓசேயா**

4. யூதேயாவில் யார் அரசாளுவதாகக் கேள்விப்பட்டு யோசேப்பு அங்கு போக அஞ்சினார்?

   **1) ஏரோது 2) கைப்பாஸ் 3) அர்க்கெலா**

5. சல்மோனுக்கு பிறந்த மகன் யார்?

   **1) போவாசு 2) ரெகபெயாம் 3) மனாசே**

**தவறெனில் சரியான விடையை எழுதவும்:**

1. யாக்கோபின் மகன் தாவீது.
2. மெசியாயு தெயாவிலுள்ள நாசரேத்தில் பிறப்பார்..
3. மனிதர் அப்பத்தினால் மட்டுமல்ல மாறாக அலைபேசியாலும் வாழ்வார்...
4. தூய்மையான உள்ளத்தோர் பேறு பெற்றோர் ஏனெனில் அவர்கள் நிறைவு பெறுவர்...
5. நீங்கள் பேசும் போது ஆணையிட்டு அடித்துச் சொல்லுங்கள்...

**விதிகள்:**

1. அனுப்புபவர் பெயர் தொடர்பு எண் முகவரியை குறிப்பிடவும். குடும்பத்திற்கு ஒருவர் போட்டியில் பங்கேற்கலாம்.
2. விடைகளை ஆகஸ்ட் 05–ம் தேதிக்குள் அனுப்பவும். 5ம் தேதிக்கு பின்பு அனுப்பினால் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
3. வெற்றி பெற்றவர்களுக்கு 06–ம்தேதி முதல் செவ்வாய் அன்று 11.00 மணிக்குமேல் ஆலயத்தில் நடைபெறும் திருப்பலியின் நிறைவில் பரிசுகள் வழங்கப்படும்.
4. விடைகளை நேரிலோ அல்லது அஞ்சல் அட்டையிலோ அல்லது ( WhatsApp ) பகிரியிலோ அனுப்பலாம்.
5. அனுப்ப வேண்டிய முகவரி: **உதவிபங்குத்தந்தை**


   அந்தோணியார் திருத்தலம்
   எண்: 38, எம்.ஜி.ஆர். சாலை
   பாலவாக்கம் சென்னை–600 041.
   தொலை பேசி எண்: 6383948956

# ஞாயிறு சிந்தனைகள்

## “பொதுக்காலம் 19-ஆம் ஞாயிறு”

அருட்பணி **காணிக்கைராஜ்**

**11.08.2024**



**வாசகங்கள்:**

*I. அர 19:48*

*II. எபே 4:30,5:2*

*III. யோவான் 6:4151*

### வல்லமையைப் பெறுவோம் அவர் வழி நடப்போம்...!

கடல்வழிப் பயணம் ஒரு கனவாக இருந்த காலத்தில் அதை நனவாக்கும் வெறியில் புறப்பட்டார் கொலம்பஸ். பக்கத் துணையாகப் பயணிகள் யாரும் வரவில்லை. கொள்ளையர்களும், குற்றவாளிகளுமாக கைது செய்யப்பட்ட சிறைக் கைதிகளை அவருடன் அனுப்பினர். பாதி வழியில் பிரச்சினை ஏற்பட்டது. உணவுப் பொருட்களைப் பாதுகாத்து வந்த ரொனால்ட் என்பவன் அதிர்ச்சியை அறிவித்தான். “கைவசம் உள்ள உணவு ஊர் திரும்ப மட்டுமே போதுமானது. மேற்கொண்டு பயணம் தொடர்ந்தால் ஒவ்வொரு நாளும் திரும்புவதற்கான உணவு தீர்ந்து போகும். எனவே இனிமேலும் கடல் பயணத்தைத் தொடர்வது நல்லது அல்ல. கப்பலை திருப்புவோம்” என்று கூறினான். உடன் இருந்த மற்ற மாலுமிகள் ரொனால்ட் சொல்வதே சரி என்றும், கப்பலை திருப்பி சொந்த நாட்டுக்கு போவதே புத்திசாலித்தனம் என்றும் கூறினர். கொலம்பஸ் எவ்வளவோ சொல்லியும் அவர்கள் அவருக்கு இசையவில்லை. இறுதியாக கொலம்பஸ் ஒரு புதுக்கணக்கு போட்டார். "திரும்பும் நாட்களில் கொலம்பஸ்க்கு ஒதுக்கப்பட்ட மொத்த உணவை மற்றவர் எல்லோரும் பங்கிட்டுக் கொள்ளலாம். பட்டினி கிடக்க நான் தயார். அந்த உணவின் துணை கொண்டு ஒரு நாளோ இரு நாளோ திட்டமிட்டபடி மேலே பயணம் செய்வோம். திரும்ப வேண்டாம்" என்றார். மற்றவர்களும் இதற்கு சம்மதித்தார்கள். பயணம் தொடர்ந்தது. அடுத்த 24மணி நேரத்துக்குள் அமெரிக்கா கடற்கரை அவர்களுக்கு தட்டுப்பட்டது. உணவைக் கருதி திரும்பி இருந்தால் கொலம்பஸ் வரலாற்றில் இடம் பெற்றிருக்க முடியாமல் போய் இருக்கக்கூடும்.

பயணங்கள் என்பவை எப்போதுமே சுகமாக இருப்பதில்லை. அதிலும் புதியதாக, முதலாவதாக, யாருமே செல்லாத திசையில், பாதைகளே இல்லாத நிலையில் பயணங்கள் செய்வது சிரமமானது மட்டுமல்ல... அது ஆபத்தானதும் கூட. இன்றைய முதல் வாசகத்தில் எலியா ஒரு பயணத்தை மேற்கொள்கிறார். அது ஒரு பாலைவனப் பயணம். நாட்டில் ஆபத்து என்று உணர்ந்தவுடன் தன்னந்தனியாக உயிருக்கு பயந்து பாலைவனத்தில் ஒரு நாள் முழுவது பயணம் செய்து களைப்படைகிறார். இனிவாழ்வதில் அர்த்தம் இல்லை என்று உணர்கிறார். என் உயிரை எடுத்துக்கொள்ளும் என்று ஆண்டவரிடம் மன்றாடுகிறார். நான் நல்லவன் அல்ல.. என் மூதாதையரை விட கெட்டவன் என்று புலம்புகிறார். கடவுள் எலியாவுக்கு உணவு

கொடுக்கிறார். தூக்கத்திலிருந்த எலியாவை தட்டியெழுப்பி உணவு கொடுத்து பயணத்தை மீண்டும் துவங்கச் சொல்கிறார்.

பாலைவனத்தில் தனி மனிதனாய் பயணம் செல்வது என்பது கற்பனை செய்துகூட பார்க்க முடியாத ஒன்று. எலியாவுக்கு ஆண்டவர் துணையாக வருகிறார். உணவைத் தருகிறார், பலத்தைத் தருகிறார். 40 இரவு, பகல் நடக்கக்கூடிய வலிமையைத் தருகிறார். எலியா தன் பயணத்தைத் தொடர்கிறார். கிறிஸ்தவ வாழ்வு என்பது எளிதான வாழ்வு அல்ல... பல நேரங்களில் எலியாவின் பாலைவனப் பயணம் நமது வாழ்க்கையில் ஏற்படும் போது பயம் சூழ்ந்து கொள்கிறது. தனிமையில் விடப்படுகிறோம். வாழ்வதற்கான நம்பிக்கை குன்றிப்போகிறது. எங்கு, எப்படி செல்லவேண்டும் என்று திசை தெரியாமல் தடுமாறுகிறோம். இத்தகைய சூழ்நிலையில் நமக்கு துணையாக, நமக்கு சக்தியும், பலமும் கொடுப்பதற்காக, செல்லவேண்டிய திசையை கண்முன் நிறுத்துவதற்காக, தொடர்ந்து பயணத்தைத் தொடர்வதற்காக இயேசு நம்முடன் வருகிறார். நற்கருணை வடிவிலே நமக்குள் நுழைகிறார். பலத்தையும், வல்லமையையும், ஆற்றலையும் தருகிறார். உலகம் முடியும் மட்டும் நான் உங்களோடு இருக்கிறேன் என்று சொன்னவர் நம்மோடு நற்கருணை வடிவிலே இருக்கிறார்.

எலியாவுக்கு முன்பாக அப்பமும், தண்ணீரும் இருக்கிறது. எலியா தூங்கிக்கொண்டு இருக்கிறார். வானதூதர் தட்டியெழுப்பி உண்ணும்படியாகச் சொல்கிறார். எலியா அப்பத்தை உண்டபின் மீண்டும் உறங்குகிறார். தொடர்ந்து வானதூதர் மீண்டும் தட்டியெழுப்பி அப்பத்தை உண்ணும்படியாகச் சொல்கிறார். நமக்கு முன்பாக நற்கருணை இருக்கிறது. வாழ்வு தரும் உணவு இருக்கிறது. கெத்சமெனி தோட்டத்தில் சீடர்கள் உறங்கிக் கொண்டிருந்தது போல நாமும் நமக்கு முன்பாக இருக்கும் இயேசுவை உணராமல் சோர்வுற்று, தளர்ச்சியுற்று விசுவாசக் குறைவினால் நற்கருணையின் வல்லமையை உணராமல் வாழ்கின்றோம். எலியாவை உண்ணும்படி சொன்னது போல நம்மையும் இந்த நற்கருணையை உண்ணும்படியாக அழைக்கிறார். 40 நாள் இரவும், பகலும் நடக்கக்கூடிய பலத்தை எலியா பெற்றதுபோல நற்கருணையைப் பெற்றுக்கொள்ளும் நாம் ஒவ்வொருவரும் கிறிஸ்தவ வாழ்வில் ஏற்படும் தடைகளை வெற்றிகொள்ள பலம்பெற முடியும்.

### உ. "விசுவாசம் உறுதிப்பட வேண்டும்":

இயேசு தன்னைப் பற்றி பல்வேறு வார்த்தைகளில் எடுத்துச்சொல்கிறார்.

1. வானத்திலிருந்து இறங்கி வந்த உணவு நானே.
2. என்னை அனுப்பிய தந்தை ஈர்த்தாலொழிய எவரும் என்னிடம் வர இயலாது. என்னிடம் வருபவரை நானும் இறுதி நாளில் உயிர்த்தெழச் செய்வேன்.
3. என்னை நம்புவோர் நிலைவாழ்வைக் கொண்டுள்ளனர்.
4. எனது சதையை உணவாகக் கொடுக்கிறேன். அதை உலகு வாழ்வதற்காகவே கொடுக்கிறேன்.


ஆனால் மக்கள் இயேசுவை எப்படியாக பார்த்தார்கள் என்றால் "இவர் யோசேப்பின் மகனாகிய இயேசு அல்லவா? இவர் தாயும் தந்தையும் நமக்கு தெரியாதவர்களா? அப்படியிருக்க நான் விண்ணகத்திலிருந்து இறங்கி வந்தேன் என இவர் எப்படிச் சொல்லலாம்" என்ற மேலோட்டமான புரிதலை வைத்திருந்தனர். மேலோட்டமான புரிதல் இயேசு தன்னைப்பற்றிச் சொன்ன ஆழமான உண்மையான செய்தியை ஏற்றுக்கொள்ளச் செய்யவில்லை. இன்று

இயேசுவின் மீது நாம் கொண்டுள்ள நம்பிக்கையின் நிலை என்ன? நற்கருணை கொண்டாட்டத்தின் மீதும் அருட்சாதனங்கள் மீதும் நமக்குள்ள விசுவாச உறுதிப்பாடு என்ன? நம்மில் பலபேர் ஞாயிற்றுக்கிழமை கிறிஸ்தவர்களாகத்தானே இருக்கின்றோம். நற்கருணையை ஒரு சடங்காக பெற்றுக்கொண்டு செல்பவர்களாகத்தானே வாழ்கிறோம். நற்கருணையை உட்கொள்ள நம்மையே தயாரிக்கின்றோமா? அதன் மறைபொருளை விசுவசிக்கின்றோமா? இயேசுவைப் பற்றிய விவரங்கள், கருத்தரங்குகள், தகவல்களை மட்டும் தெரிந்து கொண்டு வாழ்வது கிறிஸ்தவ வாழ்வு அல்ல... இயேசு தன்னுடைய தந்தையோடு கொண்டிருந்த உறவு நிலை, அப்பா அனுபவம் நாமும் பெற வேண்டும். "தந்தையே, நீர் என்னுள்ளும், நான் உம்முள்ளும் இருப்பது போல்" (யோவா 17:21) என்ற நிலை நமக்கும் ஏற்படவேண்டும், நமது விசுவாசம் உறுதிப்பட, ஆழப்பட என்ன செய்ய போகிறோம்?

### 3. தூய ஆவிக்கு நாம் சொந்தக்காரர்கள்:

உங்கள் மீது பொறிக்கப்பட்ட முத்திரையாக அவர் (தூய ஆவி) இருக்கிறார். (எபே 4:30) இந்த எண்ணம் நம் ஒவ்வொருவருக்கும் எப்போதும் இருக்கவேண்டும். தூய ஆவியின் முத்திரை நம்மீது இருக்கும் போது நாம் தூய ஆவிக்கு சொந்தமாவோம் என்பதை மறந்துவிடக்கூடாது. தூய ஆவிக்கு சொந்தமானவர்கள் "மனக்கசப்பு, சீற்றம், சினம், கூச்சல், பழிச்சொல் எல்லாவற்றையும், தீமை அனைத்தையும் உங்களை விட்டு நீக்குங்கள்" (எபேசி. 4:31) என்ற இறைவார்த்தையைக் கடைப்பிடிக்க அழைக்கப் படுகிறோம். அதுமட்டுமல்ல பரிவு காட்டவும், மன்னித்து வாழவும் அழைக்கப்படுகிறோம் என்பதையும் மறந்துவிடக்கூடாது.

இன்றைய வழிபாடு கிறிஸ்தவ வாழ்வு என்பது ஒரு கடினமானப் பயணம், நம்முடன் தூய ஆவி இருக்கிறார். இயேசு தன்னுடைய உடலை உணவாகத் தருகிறார். எனவே துணிந்து பயணிப்போம்.



# பொதுக்காலம் 20-ஆம் ஞாயிறு

**18.08.2024**



**வாசகங்கள்:**

I. நீ மொ 9:16
II. எபே 5:1520
III. யோவான் 6:5158

## இறைவனை முழுமையாய் விசுவசிக்க ஞானத்தைக் கேட்போம்..!

இன்றைய திருப்பலிக்கான வாசங்கள் இரண்டு கருத்துக்களை சிந்திக்கவும், நமது வாழ்க்கையில் அவற்றை கடைப்பிடிக்கவும் உணர்த்துவதாக நான் உணர்கிறேன்.

முதலாவதாக ஞானம் உடையவர்களாக வாழுங்கள் என்று நம்மை அழைக்கிறது. நீதிமொழிகள் புத்தகத்திலிருந்து முதல் வாசகம் எடுக்கப்பட்டுள்ளது. “ஞானம் தனக்கு என ஒரு வீட்டை கட்டியிருப்பதாகவும், அந்த ஞானம் விருந்து படைத்திருப்பதாகவும் நகரத்தின் உயரத்தில் நின்று, அறியாமையில் இருக்கும் பிள்ளைகளையும், மதிகேடுள்ள மக்களையும் அழைத்து, விருந்திலே பங்கெடுக்க வேண்டும் எனவும், விருந்திலே பங்கெடுத்து உங்களுடைய பேதமையை விட்டுவிட்டு வாழ்வைப் பெற்றுச் செல்லும்படியாகவும்” கூறப்பட்டுள்ளது. மிக எளிமையாக இந்த வாசகத்தைப் புரிந்து கொள்ள வேண்டுமானால் கடவுளே ஞானம் உள்ளவர், அவருடைய அன்பே அவர் தருகின்ற விருந்து. அவருடைய அன்பில் வாழ்கின்றபோது கடவுளைப் பற்றிய அறியாமையை விட்டுவிடுவோம். பாவத்திலிருந்து விடுதலையடைந்து உண்மையான வாழ்வைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதை உணர முடிகிறது. பவுலடியாரும் இன்றைய இரண்டாம் வாசகத்தில் ‘ஞானம் இல்லாமல் இருக்காதீர்கள். ஞானத்தோடு வாழுங்கள்’ என்று கூறுகிறார். ஞானத்துடன் வாழ்பவர்கள் தங்கள் பாவங்களிலிருந்து விடுபட்டவர்களாய் இருப்பார்கள் என்றும் கூறுகிறார். ஞானம் நம்மை ஒழுக்கக்கேட்டிற்கான வாழ்வுக்கு அழைத்துச் செல்லாது என்றும் அறிவுறுத்துகிறார்.

**ஞானம் என்பது என்ன?** சாலமோனின் ஞானம் புத்தகத்தில் ஞானம் என்பது என்ன என்று கூறப்படுகிறது. "ஞானம் கடவுளின் ஆற்றலிலிருந்து புறப்படும் ஆவி. எல்லாம் வல்லவரின் மாட்சியிலிருந்து எழும் தூய வெளிப்பாடு. எனவே மாசுபட்டது எதுவும் அதனுள் நுழைய முடியாது. ஞானம் என்றுமுள ஒளியின் சுடர். கடவுளது செயல்திறனின் கறைபடியாக் கண்ணாடி". (சா. ஞா 7:25,26). "ஞானமெல்லாம் ஆண்டவரிடமிருந்தே வருகின்றது. அது என்றும் அவரோடு இருக்கின்றது" (சீராக் 1:1) என வாசிக்கின்றோம்.

உலகம் சார்ந்த அறிவை இன்னும் தேடிக்கொண்டிருக்கின்றோம். உலகம் சார்ந்த அறிவை கொண்டவர்களைப் புத்திசாலிகள், அறிவாளிகள் திறமைசாலிகள் என்று பாராட்டுகிறோம். உலக அறிவு இருந்தால் போதும் என்று நிம்மதியடைகிறோம். நம்முடைய பிள்ளைகளை உலக அறிவு ஜீவிகளாக வளர்க்கப் பெரும்பாடுபடுகிறோம். பணம் சம்பாதிக்கும் உலக அறிவைப் புகுத்தி வளர்க்கிறோம். இதனால் தான் கொலைகள், கொள்ளைகள், அடக்குமுறைகள், தீவிரவாதங்கள், ஏற்றத்தாழ்வுகள் வளர்ந்து கொண்டிருக்கின்றன. உலக அறிவு நம்மைப் போட்டியாளர்களாக எதிரிகளாக வளர்த்துக் கொண்டிருக்கின்றன. உன்னைவிட நான்

ஜெயிக்க வேண்டும் என்று வெறிபிடித்தவர்களாக மாற்றிக்கொண்டிருக்கின்றன. உலக அறிவு உலகைப் பாதுகாக்க பயன்படுவதைவிட உலகை அழிப்பதற்காக பயன்படுவதை நாம் பார்த்துக் கொண்டிருக்கின்றோம். "ஆண்டவரிடம் கொள்ளும் அச்சமே ஞானமும் நற்பயிற்சியுமாகும்" (சீராக் 1:27). நம்முடைய பிள்ளைகளை வெறும் புத்திசாலிகளாக, அறிவாளிகளாக மட்டுமே வளர்க்காமல் கடவுளிடம் அச்சம் கொண்டவர்களாய், ஆண்டவரை தேடுகின்றவர்களாய், ஆண்டவரிடம் செபிக்கின்றவர்களாய், ஆண்டவருக்கு நன்றி செலுத்துகின்றவர்களாய், கடவுளின் பிள்ளைகளாய் வளர்த்திட முயல்வோம்.

இரண்டாவது சிந்தனையாக இன்றைய வழிபாடு நமக்கு தருவது, விசுவாச உண்மைகளை ஏற்றுக்கொள்ளக்கூடிய மனநிலையை நாம் பெற்றிருக்க வேண்டும் என்பது தான். நம்முடைய குறைந்த அறிவை வைத்துக்கொண்டு அறிவுக்கு அப்பாற்பட்ட கடவுளை, அறிவில் அடக்கமுடியாத மறை உண்மைகளை, எல்லாவற்றையும் கடந்துள்ள இறைவனை கேள்விகேட்டுக்கொண்டிருப்பது நம்முடைய விசுவாசத்திற்கு எதிரான செயலாகும். யோவான் நற்செய்தி 6ஆம் அதிகாரத்திலிருந்து கடந்த மூன்று ஞாயிற்றுக்கிழமைகளுக்கும், இன்றைய திருப்பலிக்கும் மேலும் வருகின்ற ஞாயிறு திருப்பலிக்கும் தரப்பட்டுள்ள நற்செய்தியில் நிறைய கேள்விகள் தொகுக்கப்பட்டுள்ளதை காண்கின்றோம்.

1. "இத்தனை பேருக்கு இவை எப்படி போதும்? (6:9) என்று அந்திரேயா கேட்கிறார்.
2. "ரபி, எப்போது இங்கு வந்தீர்?" (6:25) என்று அப்பத்தை எதிர்பார்த்த மக்கள் கேட்டனர்.
3. எங்கள் செயல்கள் கடவுளுக்கு ஏற்றவையாக இருப்பதற்கு நாங்கள் என்ன செய்ய வேண்டும்? (6:28) என்று மக்கள் கேட்டார்கள்.
4. நாங்கள் கண்டு உம்மை நம்பும் வகையில் நீர் என்ன அரும் அடையாளம் காட்டுகிறீர்? (6:30)
5. "நான் விண்ணகத்திலிருந்து இறங்கி வந்தேன்" என இவர் எப்படி சொல்லலாம்? (6:42)
6. "நாம் உண்பதற்கு இவர் தமது சதையை எப்படி கொடுக்க இயலும்? (6:52)

இயேசுவின் வார்த்தைகளைக் கேட்டு ஏற்றுக்கொள்ள முடியாதவர்கள் பலவிதமான கேள்விகளைக் கேட்டனர். இறுதியில் அவர்கள் இயேசுவை விட்டு விலகிச் சென்றனர். இறைவனைச் சார்ந்த அத்தனை கேள்விகளுக்கும், மறையுண்மைகளைச் சார்ந்த அத்தனை வினாக்களுக்கும் இறைவனால், திருச்சபையால் பதில் நமக்கு தரப்பட்டுள்ளது. ஆனால் அந்தப் பதில்களை ஏற்றுக்கொள்ளாமல் அவற்றையும் கேள்விக்கு உட்படுத்துவது விசுவாசத்தை, நம்பிக்கையை கேள்விக்குறியாக்குகிறது. இன்று நற்கருணையை நாம் எந்த அளவுக்கு உண்மையாக விசுவசிக்கின்றோம். இயேசுவின் பிரசன்னம் நற்கருணையில் உள்ளது என்பதை விசுவசிப்பது எளிது. ஆனால் நற்கருணை சொல்லும் மதிப்பீடுகளை நாம் ஏற்றுக்கொண்டு, அதை வாழ்வாக்குவதை நம்புகிறோமா?

இன்றைய நற்செய்தியில் இயேசு "எனது சதையை உண்டு எனது இரத்தத்தைக் குடிப்போர் என்னோடு இணைந்திருப்பர். நானும் அவர்களோடு இணைந்திருப்பேன்" (யோவா 6:56) என்று சொல்வது போல அவரோடு இணைந்திருக்க நற்கருணையை விசுவசிப்போம், நற்கருணையை தயாரிப்போடு உட்கொள்வோம். நற்கருணை காட்டும் மதிப்பீடுகளில் வாழ்ந்திடுவோம், இயேசுவோடு இருக்கும்போது ஐயமும் இல்லை... அச்சமும் இல்லை.

# பொதுக்காலம் 21-ஆம் ஞாயிறு

**25.08.2024**



**வாசகங்கள்:**

*I. யோசு 24:12, 1517,18*
*II. எபே 5:2132*
*III. யோவான் 6:6069*

## நம்பிக்கையில் நிலைத்திருப்போம்!

2000 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 25 ஆம் தேதி ஐம்பான்கா என்ற இடத்தில் 11 வயது சிறுமியான மரிசல் அப்டன் என்பவருக்கு கொடூரமான சம்பவம் நிகழ்ந்தது. தன்னுடைய மாமாவுடன் தண்ணீர் எடுத்து வருவதற்காக சென்று கொண்டிருந்தார். திடீரென்று நான்கு கொடியவர்கள் கைகளில் கொடிய ஆயுதங்களுடன் அந்த இரண்டு பேரையும் சுற்றி வளைக்கிறார்கள். அந்தச் சிறுமியின் மாமாவை குனியும்படியாக கட்டளை இட்டு கழுத்தில் அரிவாளால் வெட்டுகிறார்கள். அந்த இடத்தில் அவர் துடிதுடித்து உயிர்விடுகிறார். 11வயது சிறுமி என்ன செய்வதென்று தெரியாமல் விழிக்கின்றாள். அடுத்த கணமே அவர்கள் பிடியில் சிக்காமல் ஓடுகிறாள். அந்தக் கொடியவர்களும் அவளைத் துரத்துகிறார்கள். முடிந்தமட்டும் வேகமாக ஓடுகிறாள். ஆனால் கொடியவன் ஒருவன் வீசிய கத்தி சிறுமியின் கழுத்தை வெட்ட அவளும் அந்த இடத்தில் விழுகின்றாள். மயக்கம் தெளிந்து கண்விழித்துப் பார்க்கும்போது அந்தக் கொடியவர்கள் அங்கே இருப்பதைப் பார்த்து மறுபடியும் கண்களை மூடுகிறாள். இறந்து விட்டதைப்போல நடிக்கிறாள். இறந்து போய்விட்டாள் என்று நினைத்து அங்கே விட்டுச் செல்கிறார்கள். கழுத்தில் வெட்டு, முதுகில் வெட்டு, இரண்டு கைகளில் உள்ள விரல்கள் துண்டாக வெட்டப்பட்டுள்ளன. வெள்ளத்துடன் வீட்டுக்கு ஓடுகிறாள். அவளுடைய நிலையைப்பார்த்த பெற்றோர் மருத்துவமனையில் சேர்க்கிறார்கள். மருத்துவர்கள் சிரமப்பட்டு அறுவை சிகிச்சை செய்கிறார்கள். 25 தையல் அவளது உடலில் போடப்படுகிறது. அவளது கரங்களில் விரல்கள் இல்லை, மருத்துவமனையை விட்டு வீட்டுக்கு வரும்போது அவர்களுடைய வீடு முழுவதுமாக எரிக்கப்பட்டு சாம்பலாக மாறியிருந்தது.

மரிசல் தன்னுடைய நிலையைக் கண்டு தளர்ந்து போகவில்லை. வீடு சாம்பலாகிவிட்டது. இரண்டு கரங்கள் முடங்கிப்போய்விட்டன. உடல் முழுவதும் காயங்கள் ... ஆனாலும் தனது பயணத்தை தொடர்ந்தாள். கணினியைக் கற்றுத் தேர்ந்தாள். மாற்றுத் திறனாளிகளுக்கான பள்ளியில் மிகச்சிறந்த மாணவியென்று பெயர் பெற்றாள். ஓட்டல் மற்றும் ரெஸ்ட்டாரன்ட் நிர்வாகப் படிப்பைத் தேர்ந்தெடுத்து படித்தாள். தங்க மெடலைப் பெற்றாள். 2011ஆம் ஆண்டு ஓட்டல் Chef-க்கான படிப்பை படித்து முடித்து இன்றைக்கு ஒரு பெரிய ஓட்டலில் பணிபுரிகிறாள். இவளைப் பற்றி கூறும்போது Chef without hand என்று கூறுகிறார்கள்.

சாதனையாளர்கள் எப்போதுமே நம்மிடம் என்ன இல்லை என்று நினைத்து

வருந்தமாட்டார்கள். மாறாக தங்களிடம் இருப்பதையே மூலதனமாகக் கொண்டு சாதிக்க நினைப்பார்கள். மரிசல் என்ற சிறுமியும் அப்படித்தான். எல்லாம் சரியாக இருந்தால் வெற்றி பெறுவதில் எந்த சிக்கலும் இல்லை. தடைகளைக் கடந்து வெற்றி பெறும்போதுதான் அது சாதனையாக மாறுகிறது.

இன்றைய நற்செய்தியில் தன்னுடைய திருத்தூதர்களைப் பார்த்து இயேசு, "நீங்களும் போய்விட நினைக்கிறீர்களா?" என்று கேட்கிறார். யோவான் நற்செய்தி 6 ஆம் அதிகாரத்தின் தொடக்கத்தில் இயேசு அப்பங்களை பலுகிப் பெருகச் செய்கிறார் மக்களின் பசியைப் போக்குகிறார். அப்பங்களை உண்டவர்களின் எண்ணிக்கை மட்டுமே 5000 என்று வாசிக்கின்றோம். அதற்கு அடுத்த நாளும் மக்கள் இயேசுவைத் தேடி வருகிறார்கள். இயேசு தனது உடலான நற்கருணையைப் பற்றி பேசுகிறார். மக்கள் முணுமுணுக்கிறார்கள், எண்ணிக்கையில் குறைந்து போகிறார்கள். அதன்பின்பும் இயேசு தனது உடலை, சதையை வாழ்வு தரும் உணவு என்கிறார். இப்போது சீடர்கள் முணுமுணுக்கிறார்கள். அவரை விட்டுப் பிரிந்து செல்கிறார்கள். இறுதியாக தன்னுடன் இருந்த பன்னிரு சீடர்களையும் பார்த்து கேட்கிறார் 'நீங்களும் போய்விட நினைக்கிறீர்களா?". தங்களுக்கு பயன் இல்லை என்றவுடனே பறந்து போன மக்கள் கூட்டத்தைப் பார்த்து இயேசு தளர்ந்து போகவில்லை. பன்னிரு சீடர்களில் ஒருவன் தன்னைக் காட்டிக் கொடுப்பவன் என்பது மட்டுமல்ல, தன்னை விட்டு அனைவருமே ஓடிப்போவார்கள் என்பதும் இயேசுவுக்குத் தெரியும், ஆனாலும் இயேசு முடங்கிப்போகவில்லை. தன்னுடைய இலட்சியப் பயணத்தில், இறையரசு பணியில் யார் உடன் இருந்தாலும், யார் பிரிந்து போனாலும் அவர் செல்லவேண்டிய பாதையில் உறுதியாய் இருந்தார்.

இந்த மனநிலை நமக்கும் வேண்டும். கூட்டத்தோடு கூட்டமாக இருப்பதில் எந்த தயக்கமும் இல்லை. கூட்டம் நம்மை விட்டுப்போகும்போது. நமக்கு ஏன் இந்த வம்பு? நாமும் கூட்டத்தோடு கூட்டமாக இருந்துவிடலாமே என்று நமது மதிப்பீடுகளை, நமது சுயமதிப்பை நாம் இழந்துவிடுகின்றோம். இயேசுவின் இறையாட்சிப் பணியில் இழப்புகள் என்பது நிச்சயமாக நடக்கும். அதனால் தான் இயேசு, என் பொருட்டும் நற்செய்தியின் பொருட்டும் வீடுகளையோ, சகோதரர்களையோ, சகோதரிகளையோ, தாயையோ, தந்தையையோ, பிள்ளைகளையோ... விட்டுவிடாத எவரும் என் சீடராக இருக்க முடியாது என்று கூறுகிறார். இழப்புகள் என்பது இயேசுவின் வாழ்வில் இருந்தாலும் சோர்ந்து போகாமல் பணிசெய்தது போல நாமும் சோர்ந்து போகாதபடி வாழக் கற்றுக்கொள்ள வேண்டும்.

## தடுமாற்றம் இல்லாத நம்பிக்கை வேண்டும்:

யோசுவா "நானும் என் வீட்டாரும் ஆண்டவருக்கே ஊழியம் செய்வோம். நீங்கள் வேற்றுத் தெய்வங்களை வழிபடுவதாக இருந்தால் அது உங்கள் விருப்பம். ஆனால் ஒரு போதும் நான் என் ஆண்டவருக்கு எதிராக ஊழியம் செய்யமாட்டேன்'' என்று கூறுகிறார். நற்செய்தியில் கூட நீங்களும் என்னை விட்டுப்போய்விட நினைக்கிறீர்களா? என்று திருத்தூதரை கேட்கும்போது "யாரிடம் செல்வோம் இறைவா" என்று பேதுரு கூறுகிறார். உம்மை விட்டுப்போகமாட்டோம் என்று சொல்கிறார். ஒரு ஊழியன் இரு தலைவர்களுக்கு ஊழியம் செய்ய இயலாது. நமது விசுவாச வாழ்க்கையில் தடுமாற்றங்கள் வந்து போகின்றன. யாரிடம் செல்வது, எதை நம்புவது என்ற சோதனைகள் வரலாம். என் ஆண்டவரை விட்டுப்போகமாட்டேன் என்ற யோசுவா மற்றும் பேதுருவைப் போல வாழ்ந்திட வேண்டும். உறுதியான நம்பிக்கை நம்மிடம் இருக்கிறதா? மூடநம்பிக்கைகள், பில்லி சூனியங்கள்,

தாயத்து கட்டுதல் போன்றவற்றை தேடி இன்னும் நமது கத்தோலிக்க மக்கள் செல்வது நமது நம்பிக்கையில் தடுமாற்றம் இருப்பதன் வெளிப்பாடுதானே.

### பிரமாணிக்கமான வாழ்வு வாழ்வோம்:

கணவன் மனைவி உறவு ஒரு புனிதமான உறவு. அதில் நூறு சதவீதம் பிரமாணிக்கத்தன்மை உள்ளது. இருவர் அல்ல... அவர்கள் ஒரே உடல். ஒருவரின் துன்பம் மற்றவரின் துன்பமாக மாறுகிறது. அந்த அளவுக்கு ஒன்றிப்பு உள்ளது. இறைவனுக்கும் நமக்கும் உள்ள உறவு அப்படியாக மாறவேண்டும். நூறு சதவீதம் பிரமாணிக்கம் இறைவனுக்கும் நமக்கும் உள்ள உறவில் இருக்க வேண்டும். பிரமாணிக்கம் என்பது நம்பிக்கையில் ஏற்படுவது. அத்தகைய நம்பிக்கையைக் கேட்போம்.



*கடவுளே, எப்படியாவது நியூயார்க்க இந்திய தலைநகரமா மாத்திரு...*

*ஏன் பாப்பா அப்படி வேண்டுறே?*



*ஏன்னா நான் அப்படித்தான் பரிட்சையில எழுதியிருக்கேன்..*

# பொதுக்காலம் 22ஆம் ஞாயிறு

**01.09.2024**



**வாசகங்கள்:**

I. இ.ச.4:12,68

II. யாக். 1:1718,2122,27

III. மாற்கு 7:18,1415,2123

## இறைவார்த்தையைக் கேட்கிறவர்களாக மட்டுமல்ல...

## அதன் சாரத்தை உள்வாங்கியவர்களாக வாழ...

1959 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 3 ஆம் தேதி பாரிஸ் நகரத்திலிருந்து விமானம் 707 அட்லாண்டிக் பெருங்கடல் மீது 35,000 அடி உயரத்தில் பறந்து கொண்டிருந்தது. விமானத்தை லின்ச் என்ற விமானியும் அவருடைய உதவி விமானியும் செலுத்திக்கொண்டிருந்தனர். விமானத்தில் இருந்தவர்கள் அனைவரும் மகிழ்ச்சியுடன் தங்கள் பயணத்தைத் தொடங்கினர். விமானி லின்ச் மிகத் திறமையாக காற்றை எதிர்கொண்டு விமானத்தை பயணப்பாதையில் செலுத்தினார். உதவி விமான ஓட்டி விமானம் செல்கின்ற வரைபடத்தைக் கவனித்து வந்தார். உதவி விமானியிடம் விமானத்தை செலுத்தும்படி பொறுப்பைக் கொடுத்துவிட்டு லின்ச் பயணிகள் இருக்கும் பகுதிக்கு வருகிறார். ஒரு இருக்கையில் தாய் ஒருவள் தனது அழுகின்ற குழந்தையை சமாதானப்படுத்துவதைப் பார்த்த விமானி லின்ச், குழந்தையின் அருகில் சென்று, குழந்தையிடம் இனிமேல் நீ நன்றாகத் தூங்கலாம். உனக்கு ஒன்றும் ஆகாது, பயப்படத் தேவையில்லை என்று ஆறுதல் சொல்கிறார். அடுத்த கணமே விமானம் கட்டுப்பாட்டை இழந்து தலைகீழாகப் புரண்டு கடலை நோக்கி வேகமாக வருகிறது. விமானி லின்ச் சுதாரித்துக் கொண்டு எழுகின்றார். மிகுந்த சிரமத்துடன் விமான ஓட்டியின் அறையை அடைகின்றார். 35,000 அடி உயரத்தில் பறந்த விமானம் 6,000 அடி உயரத்திற்கு வந்துவிட்டது. இன்னும் சில நிமிடங்களில் அட்லாண்டிக் பெருங்கடலில் விழுந்து சிதையப்போகின்றது. விமானி லின்ச் தனது அனுபவத்தைக் கொண்டு நிலைமையை சமாளிக்கின்றார். மீண்டும் விமானத்தை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருகின்றார். அப்படி விமானம் கட்டுப்பாடின்றி போனதற்கு என்ன காரணம் என்று பார்த்தபோது தானாக விமானத்தை செலுத்தும் கருவியை உதவி விமானி பயன்படுத்தி விமானத்தை இயக்கியுள்ளார். தானாக விமானம் செலுத்தும் கருவி பயன்பாட்டில் இல்லை என்ற எச்சரிக்கை கருவியின் மூலம் வந்துள்ளதை உதவி விமானி கவனிக்காமல் விமானத்தை செலுத்தியதே அந்த ஆபத்தான சூழ்நிலைக்கு காரணம் என்று சொல்லலாம்.

விமானப் பயணமாக இருந்தாலும், தரைவழிப் பயணமாக இருந்தாலும் சரி எச்சரிக்கை தருகின்ற விளக்குகள், அடையாளக் குறிகள், வாகனங்களை கவனித்துச் செல்லவேண்டும் என்பது நம் அனைவருக்கும் தெரிந்த விஷயமே. அப்படி இல்லையெனில் ஆபத்துக்கள் ஏற்படுவது உண்மை.

## 1. இஸ்ரயேல் மக்களின் பயணத்தில் ஆண்டவரின் சட்டங்கள்:

இஸ்ரயேல் மக்களை தனது மக்களாக தேர்ந்துகொண்டபின் அவர்களைப் பரிசுத்தமான தூய்மையான வழியில் நடக்க வேண்டும் என்பதற்காக பல்வேறு சட்டங்களை கடவுள் கொடுத்தார். அவற்றுள் முக்கியமானது பத்துக்கட்டளைகள், மேலும் முதல் 5 புத்தகங்களில் கடவுள் இஸ்ரயேல் மக்கள் எப்படியெல்லாம் வாழவேண்டும் என்ற பல்வேறு கட்டளைகளை தந்திருப்பதைப் பார்க்கின்றோம். இஸ்ரயேல் அல்லாத மக்களும் தங்களுக்கென சில கட்டளைகளைப் பெற்றிருந்தனர். எனவே கடவுள் இஸ்ரயேல் மக்களை எச்சரிக்கின்றார். நான் கொடுத்த கட்டளைகளைப் பின்பற்றுங்கள். அந்தக் கட்டளைகளை மற்ற மக்கள் கடைப்பிடிக்கின்ற கட்டளைகளுடன் சேர்ப்பதோ, அல்லது நான் கொடுத்த கட்டளைகளை நீக்குவதோ கூடாது. நான் கொடுத்த கட்டளைகளைக் கடைப்பிடித்தாலே போதுமானது. அவை நீங்கள் கடைப்பிடிக்க வேண்டிய, உங்கள் வாழ்வுக்கு வழிகாட்டக்கூடிய ஒழுங்கு முறைகளை கொண்டிருக்கின்றன. என் கட்டளைகள் நீங்கள் செல்லவேண்டிய பாதைக்கு துணையாக இருக்கும் என்பதை முதல் வாசகம் கூறுகிறது.

## 2. சாரம் இழந்த சக்கையாக:

பத்துக்கட்டளைகளும், முதல் 5 புத்தகங்களும் இஸ்ரயேல் மக்கள் எப்படி வாழ வேண்டும் என்ற நியமங்களைக் கொண்டிருந்தன. கடவுள் அவற்றை கவனமாகப் பின்பற்ற அறிவுறுத்தினார். ஆனால் காலப்போக்கில் அதாவது இயேசு பிறப்பதற்கு 5 நூற்றாண்டுகளுக்கு முன்பாகவே மறைநூல் அறிஞர்கள் கடவுள் கொடுத்த சட்டங்களை விளங்கிக் கொள்கின்ற முயற்சியில் பலவிதமான வாய்மொழிச் சட்டங்களை உருவாக்கினார்கள். அவற்றை மக்கள் கடைப்பிடிக்க வேண்டும் என்பதில் கவனமாக இருந்தார்கள். அதில் ஒன்றுதான் உண்பதற்கு முன் கைகள் கழுவுகின்ற சடங்கு. இது வெறும் உடல் சம்பந்தமான தூய்மையாகப் பார்க்காமல் ஒரு ஆன்மிக காரியமாகவே, சடங்காகவே அவர்கள் பின்பற்றினார்கள். அப்படிச் செய்யவில்லை என்றால் தீட்டு, பாவம், கடவுள் தண்டிப்பார் என்றெல்லாம் கூறியிருந்தனர். இன்றைய நற்செய்தியில் இயேசு இப்படிப்பட்ட தேவையற்ற சட்டங்களை எதிர்க்கின்றார். உண்பதற்கு முன்பாக கைகளை கழுவாதவர்கள் கடவுளுக்கு முன்பு தீட்டுப்பட்டவர்கள், பாவிகள் என்கிறீர்களே, "உங்களது உள்ளத்தில் பரத்தைமை, களவு, கொலை, விபசாரம், பேராசை, தீச்செயல், வஞ்சகம், காமவெறி, பொறாமை, பழிப்புரை, செருக்கு, மதிகேடு ஆகியவற்றை தூண்டும் தீய எண்ணங்கள் வெளிவருகின்றன" (மாற்கு 7:22) இவையெல்லாம் தீட்டு இல்லையா? கைகளை கழுவாதது தீட்டு என்றால் உள்ளம் அழுக்குப் படிந்திருக்கிறதே... அது தீட்டு இல்லையா? என்று கேள்வி கேட்கிறார். கடவுள் கொடுத்த கட்டளைகளின் சாரத்தை இழந்து சக்கைகளை மட்டுமே பிடித்துக்கொண்டிருந்த மக்களை இயேசு சாடுகிறார். இன்று நம்முடைய ஆன்மிக வாழ்க்கையிலும் சாரத்தை இழந்து சக்கைகளை மட்டுமே பிடித்துக்கொண்டு இருக்கிறோமோ? என்ற அச்சம் இருக்கிறது. மக்களின் தேவைகள், எதிர்பார்ப்புகள், கவலைகள், இன்ப துன்பங்களை கணக்கில் கொள்ளாத, அவர்களை மையப்படுத்தாத நிலையில் சட்டங்கள் இருக்கின்றனவோ? என்ற ஏக்கம் வருகிறது. இறைமக்கள் வாழ்விலும் கூட ஏதோ கடமைக்காக திருப்பலியில் பங்கேற்க வேண்டும் என்று வருகிறார்களே தவிர வாழ்க்கையின் மாற்றத்திற்காக வழிபாடுகளில் பங்கேற்கிறார்களா? என்ற சந்தேகம் வருகிறது. இயேசுவின் கல்வாரி பலி நம்மையெல்லாம் ஒரே சமூகமாக மாற்றுவதற்குதானே... ஆனால் நமக்குள் பிளவுகள் இருப்பது ஏன், நாம் சாரத்தை இழந்துவிட்டோமா?

### 3. உண்மையான ஆன்மீகம் எது?



இறைவார்த்தையை கேட்கின்றவர்களாக மட்டும் வாழாமல், வழிபாடுகளை வெறும் சடங்குகளாக நிறைவேற்றாமல், இறைவார்த்தையின் சாரத்தையும், வழிபாடுகளின் சாரத்தையும் நமதாக்கிக் கொண்டு தந்தையாம் கடவுளின் பார்வையில் தூய்மையானதும் மாசற்றதுமான சமயவாழ்வாகிய துன்புறும் அனாதைகளையும் கைம்பெண்களையும் பேணிக்காக்கப்படும், மேலும் இன்றைய சூழ்நிலையில் யாருக்கெல்லாம் நமது அன்பு, கருணை, பரிவு, சேவை தேவையோ அவர்களுக்கு நம்மாலான உதவியை செய்வதே உண்மையான ஆன்மீகம் ஆகும். சாரம் இல்லாத உப்பாக அல்ல... சாரம் கொண்ட உப்பாக வாழ்வோம்.

கடற்கரை

## புனித அந்தோணியார் திருத்தலம்

எண். 38, M.G.R. ரோடு, பாலவாக்கம், சென்னை-600 041.

## 15.08.2024 - வியாழக்கிழமை ஐம்பெரும் திருவிழாக்கள்

1. இந்தியாவின் சுதந்திர தின விழா
2. அன்னை மரியாவின் விண்ணேற்பு விழா
3. புனித அந்தோணியாரின் பிறப்பு விழா
4. திருத்தலத்தின் வெள்ளி ஆண்டு துவக்க விழா
5. சேவா-மிஷனரி சபையின் பொன்விழா முன்னிட்டு நம் பங்கின் அருட்சகோதரிகளை வாழ்த்தும் விழா

### நிகழ்வுகள்

| | | |
|---|---|---|
| காலை | 6.30 மணிக்கு | திருப்பலி. |
| | 7.30 மணிக்கு | தேசியக் கொடியேற்ற நிகழ்வு. |
| | 9.30 மணிக்கு | மறைவட்ட இளையோருக்கான போட்டிகள் |
| | 11.00 மணிக்கு | ஆராதனை, புனித அந்தோணியார் பிறந்த நாள் சிறப்பு திருப்பலி, அன்னை மரியாள், புனித அந்தோணியார் திருக்காட்சி, பீடங்கள் திறந்து புனிதப்படுத்துதல் |
| | 4.00 மணிக்கு | விளையாட்டு போட்டிகள் வெற்றி பெற்றோருக்கு பரிசு வழங்குதல் |
| | 5.45 மணிக்கு | ஜெபமாலை, ஐம்பெருவிழா சிறப்பு திருப்பலி தலைமை. அருட்பணி. அந்தோணி செபாஸ்டின் |







இதோ உன் தாய்







பாலவாக்கம் பங்குதளம் உதயமாகி 25-ம் ஆண்டு "வெள்ளி விழாவை" காண்கின்றது. வெள்ளி விழா நினைவாக ஆலயத்தின் திருத்தூயகம் (Alter Area) புனரமைப்பு செய்ய திட்டமிட்டுள்ளோம். இந்த பணிக்கு உங்களுடைய தாராள நன்கொடை தந்து உதவுங்கள்.

**வங்கி விவரம்**

Name : Seashore St Antonys Shrlne
A/c No : 0682073000000168
Bank : South Indian Bank
Branch : Vettuvankeni
IFSC : SIBL0000682